அனைத்துலக குழுவின் தலைமையிலான
நான்காம் அகிலத்தின் இலங்கைப் பகுதி

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

# தேர்தல் விஞ்ஞாபனமும் வேலைத் திட்டமும்

324.5489
TER
P.B

அனைத்துலக சோசலிசத்துக்காகப் போராடு!

324.5489
TER
AR|PB
B

இம்முறை பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் சோசலிச அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீன அரசியல் வேலைத் திட்டத்தினை முன்வைத்து. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போட்டியிடுகின்றது. பதுளை மாவட்டத்தில் தனது வேட்பாளர் பட்டியலை முன்வைத்துப் போட்டியிடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நாடு பூராவும் தேர்தல் பிரச்சாரத்தில் தலையிடுகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் படியும், புரட்சித் தலைமையைக் கட்டியெழுப்பும் பொருட்டு அதன் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரளும் படியும் சகல தொழிலாளர்கள், விவசாயிகள், ஒடுக்கப்படுவோர், இளைஞர்களை பு.க.க. வேண்டுகின்றது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை தேர்தல் கருமங்களுக்கான ஒரு அங்கீகரிக்கப்பட்ட கட்சியாகப் பதிவு செய்ய தேர்தல் ஆணையாளர் மறுத்துள்ளதால் எமது வேட்பாளர்கள் சுயேட்சைக் குழுவாகவே தேர்தலில் நிற்கின்றனர். 26 வருடங்கள் நீண்ட அரசியல் வரலாறு படைத்த பு.க.க. வின் ஜனநாயக உரிமையை இங்ஙனம் பறிப்பதன் மூலம் இந்நாட்டில் நிலவும் ஜனநாயகம் எனப்படுவதன் சுயகோலம் மீண்டும் ஒரு தடவை பிரத்தியட்சமாகியுள்ளது. பு.க.க. முன்வைக்கும் சோசலிச வேலைத் திட்டத்தினால் தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள் ஆகர்சிக்கப்படுவர் என ஆளும் வர்க்கத்துக்கும் அதன் பிற்போக்கு ஏஜன்சிகளுக்கும் உள்ள பீதியையும் குரோதத்தினையும் தேர்தல் ஆணையாளரின் தீர்ப்பு காட்டிக் கொண்டுள்ளது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைப் பகுதியாகும்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஆளும் யூ.என்.பி.க்கும் முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் மற்றும் சிங்கள-தமிழ்-முஸ்லீம் முதலாளித்துவக் கட்சிகளுக்கும், முன்னணிகளுக்கும் எதிராகப் போட்டியிடுகின்றது.

இம்முறை இலங்கைப் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் உலக அரசியல் நிலைமையும் அதன் ஒரு பாகமாக இலங்கையின் அரசியல் நிலைமையும் படுமோசமான நெருக்கடிக்கு உள்ளாகி உள்ள ஒரு நிலைமையிலேயே நடைபெறுகின்றது. உலக முதலாளித்துவம், அதன் முன்தள்ளும் உந்து சக்தியான இலாப முறை உக்கிரம் கண்டுள்ளதால் மீண்டும் ஒரு தடவை யுத்தத்தினதும், காலனித்துவத்தினதும், காட்டுமிராண்டித்தனத்தினதும் நிலைமைகளைச் சிருஷ்டித்துக் கொண்டுள்ளது. ஜுன் மாதத் தொடக்கத்தில் நடைபெற்ற ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தலில் பாசிசம் மீண்டும் தலைநீட்டுவதனதும் அனைத்து ஏகாதிபத்திய, முதலாளித்துவ ஆளும் வர்க்கப் பகுதியினர் பாசிசம் பக்கம் ஈர்க்கப்படுவதனதும் ஆபத்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியவாதிகளின் இலங்கை ஏஜன்சியான யூ.என்.பி.-சி.ல.சு.க. மற்றும் முதலாளித்துவக் கட்சிகள், உலக நெருக்கடியின் நாசகார நிலைமைகளுக்குத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களைப் பலியிடச் சபதம் பூண்டு தொழிற்படுகின்றன.

கடந்த 17 ஆண்டுகால யூ.என்.பி. ஆட்சி, அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் ஏகாதிபத்தியத்தின் வழிநடாத்தலின் கீழ், பொதுமக்களின் சகல பிரிவினருக்கும் எதிராகத் தாக்குதல் தொடுப்பதன் மூலம் இரத்தக் குளிப்பில் ஈடுபட்டதைக் குறிக்கின்றது. அவசரகாலச் சட்டத்தினைப் பிரகடனம் செய்வதன் மூலம் அரைச் சர்வாதிகார ஆட்சியின் கீழ் அரச-குண்டர் அடக்குமுறையின் மூலம் தொழிலாளர் வர்க்கத்தினை நசுக்குதல், வடக்கு-கிழக்கு தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கும் பொருட்டு இனவாத யுத்தத்தினை தொடுத்தமை, நாடுபூராவும் இனவாதப் பயங்கரத்தினைக் கட்டவிழ்த்தமை, இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு அழைப்பு விடுத்தமை, விவசாயிகளின் உதவி மானியங்களைப் பிடுங்கிக் கொண்டு அழிவினுள் தள்ளியமை, கிராமப்புற இளைஞர்கள் ஒரு இலட்சம் பேரை கொலை செய்தமை, ஆயிரமாயிரம் இளைஞர்களை சித்திரவதை முகாம்களில் தள்ளியமை, இலட்சோப லட்சம் மக்களை அகதிகளாக்கியமை, இலவசக் கல்வியையும் சுகாதார சேவையையும் சிதறடித்தமை என்பன இடம் பெற்றன. யூ.என்.பி. அரசாங்கத்தின் இந்த மிலேச்ச தாக்குதல்கள், உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் கட்டளைகளை அமுலாக்கி ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் சுரண்டலுக்கு தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைக் கீழ்ப்படுத்தவே இடம் பெற்றன.

உழைக்கும் மக்களே! ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளதும் இடது கோலம் பூண்டுள்ள அவர்களின் கைக்கூலிகளினதும் மோசடிகளுக்கு ஏமாந்து போகாதீர்கள்! யூ.என்.பி., சி.ல.சு.க., 'பொது முன்னணி' களும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் ஊழையிடுவது போல் இன்று பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதன் நோக்கம், ஜனநாயக உரிமையை வழங்கவோ அல்லது ஜனநாயகத்தை உத்தரவாதம் செய்யவோ சந்தர்ப்பம் வழங்குவது அல்ல. இந்த முதலாளித்துவக் கட்சிகள் தேர்தலை மோசடிகள், கதையளப்புக்கள், வெளிப்பூச்சுப் பேச்சுக்கள் மூலம் குழம்பிப் போயுள்ள மத்தியதர வர்க்கப் பகுதியினரைத் தமது கட்சிகளைச் சூழ அணிதிரட்டிக் கொண்டு, அரசியல் அதிகாரத்துக்குப் பாய்ந்து கொள்வதன் மூலம், மிலேச்சத் தாக்குதல்களினால் திரும்பவும் பொறுமை இழந்து போயுள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள் மீது பாசிசத் தாக்குதலைக் கட்டவிழ்க்கப் பயன்படுத்த உள்ளன. அதன் மூலம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் மிலேச்சச் சுரண்டலுக்கான நிலைமைகளை மேலும் மேலும் உத்தரவாதம் செய்ய முயல்கின்றன. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சமசமாஜக் கட்சியும், நவசமசமாஜக் கட்சியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் முதலாளிகளின் அந்த முயற்சியின் நிர்வாணப் பங்காளிகள் ஆகியுள்ளன.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த அப்பட்டமான உண்மைகளை தொழிலாளர் வர்க்கத்தின் முன்வைத்து, அதற்கு எதிராகப் போராடும் அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில், தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் போராட்டத்தின் ஒரு பாகமாகவே இத்தேர்தலினுள் செயற்படுகின்றது. இலங்கை, ஈழம் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஐக்கியத்தினைக்

கட்டி எழுப்ப வேண்டும். முதலாளித்துவத்தில் இருந்து சுயாதீனமான அரசியல் சக்தியாக சிங்கள–தமிழ் தொழிலாளர் வர்க்கம் கிளர்ந்து எழுந்து, ஏழை விவசாயிகளதும் வேலையற்ற இளைஞர்களதும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களதும் தலைமையை வகிக்க வேண்டும். இந்தப் புரட்சிகரச் சக்திகளின் ஐக்கியத்தின் அடிப்படையில் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கி வீசி, இலங்கை–தமிழ் ஈழம் சோசலிச குடியரசு என்ற விதத்தில் தொழிலாளர்–விவசாயிகள் அரசாங்கத்தினை அமைக்க முன்நோக்கிச் செல்வதைத் தவிர முதலாளித்துவப் பேரழிவுக்கு முகக் கொடுக்கக் கூடிய வேறு வேலைத்திட்டம் கிடையாது.

எனவேதான் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் தலைவிதி இந்த முன்நோக்கினை அடிப்படையாகக் கொண்ட புதிய புரட்சிகரத் தலைமையைக் கட்டி எழுப்புவதில் தங்கியுள்ளது. சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ.தொ.கா. மலையக மக்கள் முன்னணி போன்ற அமைப்புக்கள் அடியோடு வர்க்க எதிரியின் முகாமுக்குள் நுழைந்து கொண்டு, முதலாளித்துவ தேசிய அரசினைக் காக்கும் தேசியவாத வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவக் கட்சிகளாகப் பரிணாமம் அடைந்துள்ளன. கடந்த 17 ஆண்டுகளிலும், அவ்வாறே அதற்கு முன்னைய கூட்டரசாங்க கால கட்டத்திலும் ஆளும் வர்க்கத்தின் காட்டுமிராண்டித் தாக்குதல்களின் கொடிய, முகமூடி அணிந்த சகபாடிகளாக இக்கட்சிகள் செயற்பட்டன. தொழிலாளர்களே, ஒடுக்கப்படும் மக்களே! உங்களின் எதிர்காலம் முதலாளித்துவ அமைப்பைத் தூக்கிவீசி, சோசலிசத்துக்காகப் போராடுவதிலேயே தங்கியுள்ளது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் (புகக) தேர்தலில் பங்குகொள்வதன் அடிப்படை நோக்கம், இந்தப் புதிய அனைத்துலக சோசலிசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு புரட்சிகர மார்க்சிசத் தலைமையைக் கட்டி எழுப்புவதே. தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தினை ஊர்ஜிதம் செய்வதும், தொழிலாளர் வர்க்கத்தினை அரசியல் ரீதியில் சுயாதீனமான புரட்சிகரச் சக்தியாக அணிதிரட்டி, அதைச் சூழ ஒடுக்கப்படும் தேசியக் குழுக்களை அணிதிரட்டுவதும், சோசலிச வேலைத்திட்டமும் பு.க.க. முன்வைக்கும் மூன்று பதாகைகளாகும்.

## உலக முதலாளித்துவ நெருக்கடி

ஆளும் யூ.என்.பி.யும் சி.ல.சு.க.வும் அபிவிருத்தியின் திறவு கோலாக "திறந்த பொருளாதார வேலைத்திட்டத்தினை" சுட்டிக்காட்டுகின்றன. இந்தப் பட்டியலை பின்தங்கிய நாடுகளின் முதலாளிகளின் கரங்களுக்கு வழங்கியது ஏகாதிபத்திய ஆளும் வர்க்கமே. திறந்த பொருளாதாரம் எனப்படுவது பூகோளமயமாக்கப்பட்ட உற்பத்தியில் ஈடுபடும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் பகற்கொள்ளைக்காக ஒவ்வொரு நாட்டினதும் வளங்களையும், உழைப்புப் படையையும் சுரண்டுவதற்கான கதவுகளை அகலத் திறந்து விடுவது அன்றி வேறொன்றும் அல்ல; பொதுமக்களின் அவசியங்களைத் தவிடு பொடியாக்கி, இலாபம் சுரண்டுவதற்கான ஏகாதிபத்திய மூலதனத்துக்கு இடமளிப்பதாகும்.

முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் 1930பதுகளின் நிலைமையைத்

தாண்டிய பொருளாதார வீழ்ச்சியினுள் தலைமூழ்கிப் போயுள்ளன. இவை தற்காலிக வீழ்ச்சி அல்ல. அமெரிக்காவின் வேலையற்றோர் எண்ணிக்கை 150 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஜப்பான் உட்பட்ட முக்கிய முதலாளித்துவ நாடுகள் 24ன் பொருளாதார ஒத்துழைப்புக்கும், அபிவிருத்திக்குமான அமைப்பு (OECD) ஜுன் முதல் வாரத்தில் வெளியிட்ட அறிக்கையின்படி, வேலையற்றோர் எண்ணிக்கை 350 இலட்சம். அரைகுறை வேலைகளில் ஈடுபட்டுள்ளோர் எண்ணிக்கை 150 இலட்சம். அந்த விதத்தில் 500 இலட்சம் பேர் வேலையற்றவர்களாக உள்ளனர். இத்தகைய ஒரு நிலைமை 1930 பதுகளின் பொருளாதார வீழ்ச்சியின் போது தன்னும் இருந்ததில்லை. இவ்வாண்டில் ஜேர்மனியின் பொருளாதார வளர்ச்சி வேகம் நூற்றுக்கு 1 வீதத்துக்கும் குறைவாக இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஜப்பானின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டில் நூற்றுக்கு 1% ஆகும். இவ்வாண்டு ஜுனில் ஜப்பானின் உற்பத்தித் துறை நூற்றுக்கு 0.8% வீழ்ச்சியைக் காட்டியது.

சகல நாடுகளினதும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் தரங்களில் பாரதூரமான மாற்றங்களை ஏற்படுத்தும் விதத்தில் உற்பத்தி பூகோளமயமாக்கப்பட்டுள்ளது. வீழ்ச்சிகண்டு செல்லும் இலாப வீதத்தினைக் காக்கச் செய்யும் முயற்சிகளோடு தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள புரட்சிகர மாற்றங்கள் உற்பத்தியினதும் பங்கீட்டினதும் பூகோளமயமாக்கத்தின் பின்னணியில் இருந்து கொண்டுள்ளன. பூகோளமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தினை முக்கிய முதலாளித்துவ நாடுகளில் அணிதிரண்டுள்ள ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் தமது பிடியில் கொண்டுள்ளன. நவீன இலத்திரன், கணனி தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி முதலீட்டினை உடனடியாக வாய்ப்பான இடங்களுக்கு மாற்றுவதன் மூலம், உற்பத்தியையும் பங்கீட்டினையும் ஒழுங்கு செய்யும் சக்தியை இந்த ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் கொண்டுள்ளன. இதன் மூலம் உலகத் தொழிலாளர் வர்க்கம் தனியொரு பூகோளமயமான உழைப்புச் சந்தைக்குள் கொணரப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்களினால் முதலாளித்துவத்தின் நெருக்கடியை வெற்றி கொள்ளவோ அல்லது முரண்பாடுகளை நசுக்கவோ ஏகாதிபத்திய ஆளும் வர்க்கத்தினால் முடியாது போயுள்ளது. அதற்குப் பதிலாக முரண்பாடுகள் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் உக்கிரம் கண்டதுதான் இன்று இடம் பெற்றுள்ளது.

ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் இலாப விகிதாசாரத்தினைப் பேணவும், அதிகரிக்கவும் உலகம் பூராவும் மோசமான போட்டியையும் இடைவிடாது வளர்ச்சிகாணும் உக்கிரமான சுரண்டலையும் கட்டவிழ்த்து விட்டுள்ளன. முக்கிய முதலாளித்துவ நாடுகளில் வேரூன்றிய ஏகாதிபத்திய மூலதனம், உலக சந்தை, இலாப உழைப்பு, மூலப்பொருள்களுக்காகப் போரிட்டு வருவது அதன் வெளிப்பாடாகும்.

கடந்த இரண்டு தசாப்தங்களில் தனது உலகக் கைத்தொழில் ஆதிக்கம் சரிந்து போனதால் வெறிகொண்டுள்ள அமெரிக்க ஆளும் வர்க்கம், ஜப்பான், ஐரோப்பா எதிர் போட்டியாளர்களுக்கு எதிராக வர்த்தக யுத்தத்தின்

பாதையில் இறங்கியுள்ளது. ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்கள் ஆளுக்காள் எதிரான முகாம்களை அமைப்பதில் இறங்கியுள்ளன. இந்த முகாம்களுக்கு இடையேயான உறவுகள் என்னவாக இருப்பினும் இந்தப் பல்வேறு ஆளும் வர்க்கங்களும் தமது நாடுகளின் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான உள்நாட்டு யுத்தத்தினையும், உலகச் சந்தையை பங்கீடு செய்வதனையும், உலக யுத்தத்தினையும், காலனிகள் மயமாக்கத்தினையும் நோக்கி வேகமாகத் தள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையிலும் உலகம் பூராவும் உள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் தம்முன்னால் வளர்ச்சி கண்டு வரும் இந்தப் பிரமாண்டமான ஆபத்துக்களை உடனடியாகக் கவனத்தில் கொண்டாக வேண்டும்.

தொழிலாளர்களுக்கு எதிரான புதிய தாக்குதலுக்கான OECD அமைப்பின் வேலைத்திட்டம், ஜுன் முதல் வாரத்தில் வெளியான அதன் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது: "குறைந்தபட்ச சம்பள எல்லையை நீக்குதல்- இதன்மூலம் கூட்டுத்தாபனங்கள் விரும்பிய சம்பளத்துக்கு உழைப்பை விலைக்கு வாங்க முடியும். சமூக பாதுகாப்பு பயன்களை நீக்குதல் - இதன் மூலம் வேலையின்மைக்குள் தள்ளப்படும் தொழிலாளர்களை குறைந்த சம்பளத்துக்கு வேலைசெய்யுமாறு நெருக்கலாம்; வேலை நேர எண்ணிக்கைக் கட்டுப்பாடு உட்பட்ட ஏனைய சமூகப் பொறுப்புக்களை நீக்குதல். ஐரோப்பிய கமிசனின் புதிய வெள்ளை அறிக்கையில் "உழைப்பு சந்தையின் நிர்வாக விதிகளை முழுப்படியே நீக்குதல்" என்பன சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

இதன் அர்த்தம் என்ன? வேலையின்மைக்குள் தள்ளப்பட்டுள்ள பிரமாண்டமான உழைப்புப் படையை நிறுவி, நலன்புரி வேலைத்திட்டங்களை அகற்றி, குறைந்தபட்சச் சம்பளத்துக்கு உழைப்புச் சக்தியைக் கொள்ளை அடிப்பதன் மூலம் உபரி உழைப்பை மிலேச்சமான முறையில் சுரண்டுவதாகும்.

இலாப வெறிகொண்டு தொடுக்கப்படும் தாக்குதலின் அரசியல், ஏகாதிபத்திய, முதலாளித்துவ ஆளும் வர்க்கங்கள் பாசிச திசையில் திரும்ப ஆரம்பித்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது. நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள இத்தாலியன் முதலாளிகள் பழைய பாரம்பரிய கட்சிகளைக் கைவிட்டு தனிக் கூட்டமாக இத்தாலிய கோடிஸ்வரனான சில்வியா பேர்ளுஸ்கோனி "இத்தாலி சக்தி" என்ற பேரில் ஒரு கட்சியை அமைக்கத் தள்ளப்பட்டதோடு அப்பட்டமான பாசிஸ்டுகளுடன் சேர்ந்து அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றத் தள்ளப்பட்டான். கடந்த ஐரோப்பியத் தேர்தலில் கிரீஸ், பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி முதலான இடங்களில் பாசிசச் சக்திகள் தலைநீட்டுவது தெளிவாகியது. சமூக நலன்புரி சேவைகள் வெட்டு, வேலை நீக்கங்களுக்கு எதிரான தொழிலாளர்கள் ஐரோப்பா பூராவும் நடாத்தும் வர்க்க நடவடிக்கைகளுக்கு ஆளும் வர்க்கத்தின் பதில் புதிய தாக்குதல்களில் இறங்கும் பொருட்டு வழிதடுமாறிய மத்தியதர வர்க்கத்தினரிடமிருந்து போஷிக்கப்படும் பாசிச சக்திகளைக் கட்டி எழுப்புவதேயாகும். பாசிச சக்திகள் இன்னமும் பரந்த இயக்கங்களாகப் பரிணாமம் கண்டுவிடவில்லை. எனினும் பழைய தொழிலாளர் அமைப்புக்களினதும் தலைமையினதும் துரோகம் காரணமாகத் தொழிலாளர் வர்க்கத்தினுள் உருவாகியுள்ள அரசியல் குழப்பத்தையும், செயலின்மையையும் தமது பாசிச தண்டினை உயர்த்திப் பிடிப்பதற்கு முதலாளிகள் சுரண்டிக் கொள்வர்.

உற்பத்தியின் பூகோளமயமும் தொழில்நுட்பத்தின் புரட்சிகர மாற்றங்களும் முதலாளித்துவ இலாப அமைப்பின் கீழ் உலகத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் முன்னேற்றத்துக்காக அன்றி அழிவுக்காகவே பயன்படுத்தப்படும். அந்நிலையில் உலக வருமான வேறுபாடு பிரமாண்டமான ஆதாளபாதாளத்தை நோக்கி வளர்ச்சி கண்டுள்ளது. உலக சனத் தொகையின் செல்வந்தரான நூற்றுக்கு இருபது பேரின் வருமானம் வறியவரான நூற்றுக்கு இருபது பேரின் வருமானத்தைக் காட்டிலும் 60 மடங்கு அதிகம். அது 1960 பதுகளில் இருந்த வேறுபாட்டைக் காட்டிலும் இரண்டு மடங்காகும். அமெரிக்காவின் செல்வந்தரான நூற்றுக்கு ஒருவர் கீழ்மட்டத்தில் உள்ள நூற்றுக்கு 90 பேர் கொண்டுள்ள செல்வத்தைக் காட்டிலும் அதிக செல்வத்தைக் கொண்டுள்ளார். வறுமையினாலும், தடுக்கக் கூடிய தொற்று நோய்களாலும் பிடிக்கப்பட்டு உலகில் தினமும் 35,000 குழந்தைகள் இறக்கின்றன - ஒரு ஆண்டுக்கு இங்ஙனம் இறப்போரின் எண்ணிக்கை 130 இலட்சமாகும். உலகின் சிறுவர் ஜனத்தொகையில் 1/5 பங்கினர் வறுமையில் வாழ்கின்றனர். நகர்ப்புறக் குழந்தைகளில் 10 கோடியினரின் வாழ்க்கை வீதிகளில் கழிகின்றது.

ஏகாதிபத்திய அமைப்புக் காலவதியான நாற்றம் கண்ட ஒரு அமைப்பாகும். முதலாளித்துவ தேசிய அரச அமைப்பும் அதனால் பேணப்படும் தனிப்பட்ட சொத்து உரிமையும், பூகோளமயமான பொருளாதாரத்துக்கும் சமூகமயமான உற்பத்திக்கும் எதிராக நின்று கொண்டுள்ளது. தேசிய அரசின் ஒடுக்குமுறை இயந்திரம் உலகு எங்கும் உள்நாட்டு யுத்தம், உலக யுத்தத் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியம் சகல நாடுகளின் உள்ளும் முதலாளித்துவ தேசியவாதம், இனவாதம், மதவாதத்தை மட்டுமல்ல சில இடங்களில் சாதிபேதங்களையும் கிளறிவிட்டுத் தொழிலாளர்களை பிளவுபடுத்தி, இரத்தக் களரிகளைச் சிருஷ்டிப்பதன் மூலம் தமது ஆதிக்கத்தினை உறுதி செய்து கொள்ளத் திரும்பியுள்ளது. பழைய யூகோசலாவியாவிலும் அதன் ஒரு பாகமாக பொஸ்னியாவிலும் சொரியும் இனவாதப் பிரிவினைகள் அதன் இன்றைய அதிதீவிர வெளிப்பாடாகும். ஏகாதிபத்திய நாடுகளினுள் ஒரு நாட்டின் தொழிலாளர்களை ஏனைய தொழிலாளர்களுக்கு எதிராகத் திருப்பும் பொருட்டு சோவினிசத்தினைத் தூண்டுவது பழைய தொழிலாளர் அதிகாரத்துவங்களின் உதவியோடு இடம் பெறுகின்றது. அவ்வாறே புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு எதிரான தடைகள் அதிகரித்துள்ளன; பாசிச தாக்குதல்கள் பரவி வருகின்றன. மறுபுறத்தில் இதே ஏகாதிபத்தியவாதிகளே "மனித உரிமைகளை காத்தல்", "சமாதானத்தை உருவாக்குதல்", "ஜனநாயகத்தை ஏற்படுத்துதல்" என்ற பேரால் அரைக் காலனித்துவ நாடுகளில் கொம்பிரதோர் (தரகு முதலாளித்துவம்) முதலாளித்துவ ஆளும் கும்பல்களைப் பாவித்து இராணுவத் தலையீடுகளை ஒழுங்கு செய்கிறார்கள்.

இந்துப் பிளவுபடுத்தல்களும், அனைத்துலக பயங்கரவாத நடவடிக்கைகளும் முக்கிய முதலாளித்துவ நாடுகளிலும் அரைக் காலனித்துவ நாடுகளிலும் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் அனைத்துலக மூலதனத்தின் பொதுத் தாக்குதலுக்குப் பலியாகிக் கொண்டுள்ள நிலைமையிலேயே இடம்பெறுகின்றது. பல்வேறு நாடுகளிலும் பல்வேறு தேசிய இனங்களையும்

சேர்ந்த தொழிலாளர்கள் ஒரே ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் சுரண்டலுக்கு ஆட்பட்டுள்ளார்கள். அந்தப் பல்வேறு கூட்டுத்தாபனங்களதும் உற்பத்தியானது பல நாடுகளில் பல மொழி பேசும் தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியின் பெறுபேறாகும். உற்பத்தியினதும் உற்பத்திச் சக்திகளின் பூகோளமயமாக்கத்துக்குப் பொருத்தமான விதத்தில் தேசிய-இன வேறுபாடுகளையும் அரச எல்லைகளையும், தாண்டிச் செல்லக் கூடிய ஒரே முற்போக்கு வர்க்கம் உலகத் தொழிலாளர் வர்க்கமே. அனைத்துலக மூலதனத்தின் தாக்குதலுக்கு எதிராக அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தினை ஐக்கியப்படுத்தி, ஒழுங்குபடுத்தும் புறநிலை நிலைமைகள் முழுமனே முதிர்ச்சி கண்டுள்ளன. ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தின் தாக்குதல்களை தோற்கடிப்பதற்கான ஒரே வழி, அனைத்துலக சோசலிசத்தின் அடிப்படையில் ஏகாதிபத்தியத்தினைத் தூக்கிவீச உலகத் தொழிலாளர் வர்க்கம் போராட்டத்துக்கு கிளர்ந்து எழுவதுதான். அனைத்துலக சோசலிசத்துக்காகப் போராடும் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தைக் கட்டியெழுப்புவது இலங்கையிலும் அனைத்து நாடுகளிலும் தொழிலாளர் வர்க்கத்தின் தீர்க்கமான அவசியமாக உருவெடுத்து உள்ளது.

## இந்தியத் துணைக் கண்ட முதலாளித்துவ நெருக்கடி

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் உட்பட்ட இந்தியத் துணைக்கண்டத்தின் சகல நாடுகளும் பிரமாண்டமான நெருக்கடியினால் பீடிக்கப்பட்டுள்ளன.

சகல நாடுகளதும் முதலாளி வர்க்கங்களும் யுத்தத்தின் பின்னைய நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தேசிய அபிவிருத்தியை சிருஷ்டிப்பதாகப் பிரசங்கம் செய்து வந்தன. இந்தியாவின் தேசிய காங்கிரசும் பர்மாவின் நேவின் இராணுவ அரசாங்கமும் தத்தம் நாடுகளுக்குப் பொருத்தமான சோசலிசத்தினை நிர்மாணித்துக் கொண்டு விட்டதாக வாயடித்துக் கொண்டன. 45 ஆண்டுகளின் பின்னர் இந்த முதலாளி வர்க்கங்கள் தமது நாடுகளில் எந்தவொரு சமூகப், பொருளாதாரப் பிரச்சினையையும் தீர்த்து வைக்கவில்லை என்பதை நிரூபித்துள்ளன; இந்தப் பிரச்சினைகளை இவை இன்னும் பன்மடங்காக உக்கிரமாக்கின. இந்த ஆளும் வர்க்கங்கள் - ஒன்றும் பாக்கி இல்லாமல் - கடந்த கால விதிமுறைகள் தவறானவை என ஒப்புக் கொண்டு குப்பைக் கூடையில் வீசிவிட்டு, ஏகாதிபத்திய முதலீடுகளை வரவழைக்கத் திரும்பியுள்ளன. இதன் கீழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்குக் கொடூரமான தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது.

**இந்தியா:** நரசிம்மராவ் அரசாங்கம் இந்தியாவை வெளிநாட்டு முதலீடுகளுக்குத் திறந்துவிட்டதைக் தொடர்ந்து 1991-92, 1992-93ல் முறையே 148 மில்லியன், 525 மில்லியன் டாலர்களாக இருந்த வெளிநாட்டு முதலீடு 1993-94ல் 3.5 பில்லியனாக உயர்ந்துள்ளது. 1994 ஜூனில் இந்திய காங்கிரஸ் கட்சி நடாத்திய மகாநாட்டில் வெளிநாட்டுக் கம்பனிகள் நூற்றுக்கு 100 வீதமும் உரித்துடைய பங்குகளைக் கொண்ட நிறுவனங்களை ஆரம்பிக்க இடமளிக்கும் பிரேரணையை நிறைவேற்றியது. இந்தியாவினுள் இத்துடன் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி கட்டளையின் கீழ் அரசாங்கத் துறையின்

தனியார்மயமாக்கமும், உதவிமான்ய ஒழிப்பும் இடம் பெறுகின்றது.

இந்நடவடிக்கைகள் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் தொழில்களுக்கும் வாழ்க்கைத் தரங்களுக்கும் எதிரான தாக்குதல்களாகவே எடுக்கப்பட்டுள்ளன. "எந்தவொரு நேரத்திலும் தொழிலுக்கு அமர்த்தி வேலை நீக்கம் செய்யும்" விதிமுறை உழைப்புச் சந்தையில் நடைமுறைக்கிடப்பட வேண்டும் என ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் நெருக்கி வருகின்றன. வெளிநாட்டுப் பண்டங்களினால் இந்தியச் சந்தை நிறைந்து வழிகின்றது. "தேசியக் கைத்தொழில்" அழிந்து செல்கின்றது. இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவர். கைத்தொழில் பன்னாட்டுக் கம்பனிகளின் ஆதிக்கத்துக்கு ஆட்பட்டுள்ளது. தொழிலாளர்கள், விவசாயிகள் இடையே எதிர்ப்பு ஊர்வலங்களும் வேலைநிறுத்தங்களும் வெடிக்கத் தொடங்கியுள்ளன.

நரசிம்மராவ் அரசாங்கம் முதலாளித்துவ வேலைத்திட்டத்தினால் உருவாகும் பேரழிவுக்கு மக்களைப் பலியிடும் பொருட்டு, அவர்களின் ஜனநாயக உரிமைகளை நாசமாக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. பாரதீய ஜனதா கட்சி (BJP) போன்ற முதலாளித்துவக் கட்சிகள் பாசிச இயக்கத்தைச் சிருஷ்டிக்க முயல்வதன் நோக்கம், நரசிம்மராவ் ஆட்சி தோல்வி காணும் நிலைமையில் அவ்விடத்தைப் பிடித்துக் கொண்டு மக்களை சர்வாதிகாரத்துக்கு அடிமைப்படுத்துவதேயாகும். பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த முதலாளிகள் ஏகாதிபத்தியவாதிகளுடன் நேரடித் தொடர்புகளை உருவாக்கச் செய்யும் முயற்சியும், முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் சகல பிரிவினரும் மதவாதம், இனவாதத்தினை தூண்டுவதும் இந்தியா சிதறுண்டு போகும் ஆபத்தைத் தோற்றுவித்துள்ளது. வெளிநாட்டு மூலதனத்தின் புதிய அவசியங்களின் படி கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் எனக் கூறிவரும் இந்தியாவின் இரண்டு ஸ்டாலினிசக் கட்சிகளும் (CPI, CPI (M) முதலாளித்துவ வர்க்கத்தின் தாக்குதலின் முன்னிலையில் தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களை ஸ்தம்பிதம் அடையச் செய்து, அவர்களது எதிர்ப்பினை அடியுண்டு போக வைக்கும் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

**பாகிஸ்தான்:** கடந்த நான்கரைத் தசாப்தங்களாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைத்தேங்காயாக பாகிஸ்தான் ஆளும் வர்க்கம் செயற்பட்டது. இந்தியாவை ஏகாதிபத்தியத்துக்குத் திறந்துவிட்டதோடு இந்த ஆளும் வர்க்கம் படுமோசமான நெருக்கடிக்குள் மூழ்கிப் போயுள்ளது. வெளிநாட்டு முதலீட்டுக்காகப் பொருளாதாரம் திறந்துவிடப்பட்டுள்ள போதிலும் அரசியல் ஸ்திரப்பாடின்மையால் முதலீடுகள் வந்து சேராது போனமை பாகிஸ்தான் ஆளும் வர்க்கத்தை வெறிபிடிக்கச் செய்துள்ளது. இந்தியாவுடன் யுத்த நிலைமையை நிர்மாணம் செய்து, நாட்டினுள் இனவாதக் கலகங்களைத் தூண்டுவிட்டு, தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை உக்கிரமான வறுமையில் தள்ளும் சர்வாதிகாரத்தினை திணிப்பதை தவிர இந்த ஆளும் வர்க்கத்துக்கு வேறு வழி கிடையாது.

**பங்களாதேஷ்** பாகிஸ்தான் முதலாளிகளின் மோசமான சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராகக் கிளர்ந்து எழுந்த கிழக்கு பாகிஸ்தானிய தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் மீதேறி ஆட்சிக்கு வந்த பங்களாதேஷ் முதலாளிகளின் கீழ் உதயமான விடுதலையே கிடையாது. ட்ரான்ஸ்நஷனல்

கூட்டுத்தாபனங்களிடம் மாதம் 14 டாலர் பிச்சைக்காரச் சம்பளத்துக்கு தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை விற்றுத் தள்ளுவது, முதலாளி வர்க்கம் சிருஷ்டித்துள்ள மிலேச்ச நிலைமைகளைச் சுட்டிக் காட்டுகின்றது. பங்களாதேஷ் இடைவிடாத சமூக வெடிப்புக்களின் களமாக உள்ளது. ஜுன் 16ம் திகதி 200,000 ஆசிரியர்கள் தொடுத்த வேலைநிறுத்தம் இந்தப் போராட்டங்களின் புதிய கட்டத்தைச் சுட்டிக் காட்டுகின்றது.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஆளும் வர்க்கங்கள் சிருஷ்டிக்கும் பேரழிவுகளுக்கு முகம் கொடுக்கும் பொருட்டு தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் முன்னுள்ள ஒரே வழி ஆசிய சோசலிச ஐக்கிய குடியரசின் ஒரு பாகமாக இந்தியத் துணைக் கண்ட சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டத்துக்குப் போராடுவதே.

## இலங்கையில் முதலாளித்துவ ஆட்சியின் நெருக்கடி

உலகப் பொருளாதாரம், அரசியலினுள் தொழிற்படும் சக்திகள் இலங்கையினுள்ளும் செயற்படுகின்றன. அதனால் இலங்கையின் ஊழல் முதலாளி வர்க்கத்தின் நெருக்கடி உக்கிரம் கண்டுள்ளது. இலங்கைப் பொருளாதாரம் முதலாளித்துவ உற்பத்தியின் பூகோளமயத்துடன் இணைந்து கொண்டுள்ளது. சுதந்திரம் எனச் சொல்லப்படுவதற்குப் பின்னர் முதலாளி வர்க்கம் வாயடித்துக் கொண்ட "தேசியப் பொருளாதார" அமைப்பினை கடந்த 17 ஆண்டுகளினுள் தகர்த்து எறிந்த யூ.என்.பி. ஆட்சியின் கீழ், பொருளாதாரம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் வளங்கள், உழைப்பு கொள்ளைக்கு ஆட்பட்டது.

முழு உற்பத்தி ஏற்றுமதிகளில் வெளிநாட்டுக் கம்பனிகளின் பங்கு நூற்றுக்கு 7 வீதத்தில் இருந்து 1988ல் 55 வீதமாக அதிகரித்தது. 1983-89 காலப்பகுதியில் முழு ஏற்றுமதி அபிவிருத்தியில் நூற்றுக்கு 62 வீதம் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மூலமே இடம்பெற்றுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் வெளிநாட்டு மூலதன ஆக்கிரமிப்பு இன்னும் அதிகரித்துள்ளது. நாட்டின் பொருளாதார விதிமுறையை உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும், ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுமே தீர்மானிக்கின்றன. நேரடி வெளிநாட்டு முதலீடுகளைத் தருவிப்பதும், அவற்றுக்கு சிறப்பு வலயங்களும் சலுகைகளும் வழங்குவதும் முதலாளி வர்க்கத்தினதும் கட்சிகளதும் பொருளாதாரக் கொள்கையில் முதலிடம் வகிக்கின்றன. இது கிராமப்புற விவசாயத் துறையை வெளிநாட்டு மூலதனத்துக்கு அடிமையாக்குவது வரை சென்றுள்ளது. 1989ல் 20368 கோடி ரூபாவாக இருந்த வெளிநாட்டுக் கடன் 1993ல் 37,240 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது. தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கை நிலைமைகள் ஏகாதிபத்திய வங்கிகளதும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும் விருப்பின் படி ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்கத்தின் இடைவிடாத தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. இலங்கைத் தொழிலாளர்கள் உலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஒரே பொருளாதாரச் செயற்பாட்டில் இணைக்கப்பட்டுள்ளனர்.

யூ.என்.பி. அரசாங்கம் இந்த நடைமுறையைக் கட்டவிழ்த்து விட்டது எப்படி? சமூக வெடிப்பினை யுத்தம், மக்கட் படுகொலைகள், பயங்கரவாதம்

மூலம் இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தது.

யூ.என்.பி.யும் சி.ல.சு.க.வும் 2000 ஆண்டில் இலங்கையை "புதிய கைத்தொழில்" நாடாக்குவதாக வாயடித்துக் கொள்கின்றன. இந்த ஓட்டை உடைசல் பீங்கான்களைக் கொண்டு ஏற்கனவே சிருஷ்டிக்கப்பட்டுள்ள நிலைமை என்ன?

வடக்கு-கிழக்கு யுத்தத்தின் மூலமும் தென்மாகாணங்களில் இளைஞர்களுக்கு எதிரான பயங்கரங்கள் மூலமும் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 125,000 ஆகும். அதாவது, நாட்டின் சனத்தொகையில் 150க்கு ஒருவர் யூ.என்.பி. அரசாங்கத்தினாலும் முதலாளி வர்க்கத்தினாலும் கொலை செய்யப்பட்டுள்ளனர். யுத்தத்தினால் 15 இலட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். சிறைக் கூடங்களில் 15,000 சிங்கள-தமிழ் இளைஞர்கள் சித்திரவதைக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்களின்படி உழைப்புப் படையில் 12 இலட்சம் பேருக்கு தொழில் இல்லை. உண்மையில் இது இதிலும் இரண்டு மடங்காகும். தனியார்மயமாக்கத்தின் மூலம் அரசாங்கத் துறையில் சுமார் 1 இலட்சம் தொழிலாளர்களின் வேலைகள் அழிக்கப்பட்டுள்ளன. காணிப் பஞ்சத்தினாலும் கடன்பளுவினாலும் உற்பத்திச் செலவு அதிகரிப்பினாலும் விவசாயிகள் எத்தகைய பேரழிவினுள் தள்ளப் பட்டுள்ளனர் என்பது விவசாயிகள் டசின் கணக்கில் தற்கொலை செய்து கொண்டதன் மூலம் வெளிப்பாடாகி உள்ளது.

1990-91 உலக வங்கி அறிக்கையின் படி இலங்கைச் சனத்தொகையில் நூற்றுக்கு 22.4 வீதம் அல்லது 38 இலட்சம் பேர் கொடிய வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். குழந்தைகளில் நூற்றுக்கு 45 வீதத்தினர் வறுமையினுள் ஜீவியத்தை ஓட்டுகின்றனர். 5-14 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களில் நூற்றுக்கு 14 வீதம் பாடசாலை செல்ல முடியாமல் உள்ளனர். யுத்தத்தினால் துயரத்துக்குள்ளான சிறுவர்களின் எண்ணிக்கை 40,000. 10,000 சிறார்கள் நடுத்தெருவில் தள்ளப்பட்டுள்ளனர். சிறுவர் விலைமாதர் தொழில் பரவி வருகின்றது. 5-14 வயதுக்கு இடைப்பட்ட 500,000 சிறார்கள் நானாவித வேலைகளில் அமர்த்தப்பட்டு உள்ளனர். மலைநாட்டில் நூற்றுக்கு 50 வீதத்தினர் எழுத்தறிவு அற்றவர்கள்.

1993 ஐக்கிய நாடுகள் மனித அபிவிருத்தி குறியீட்டு புள்ளி விபரங்களின் படி சுகாதார சேவையினுள் ஒரு போதும் நுழையாதோர் எண்ணிக்கை 17 இலட்சம். சுத்தமான நீர் கிடைக்காத மக்களின் எண்ணிக்கை 70 இலட்சம். சனத் தொகையில் அரைப்பங்கினர் - 88 இலட்சம் சௌக்கியம் இல்லாத நிலையில் வாழ்ந்து கொண்டுள்ளனர்.

தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளைத் தவிடுபொடியாக்கும் விதத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கின்றது. 1988ல் 744.1 ஆக இருந்த வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1994 ஏப்ரல் மாதத்தில் 1574 ஆக உயர்ந்துள்ளது.

சமூகத் துருவப்படுத்தல் உக்கிர மட்டத்தை எட்டியுள்ளது. "கொள்கை ஆய்வு நிறுவனத்தின்" ஆய்வுகளின் படி 1973ல் சமூகத்தில் உயர்ந்த வருமானம் பெற்ற நூற்றுக்கு 10 வீதமானோர் தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 30

வீதத்தினை நுகர்ந்த அதே வேளையில், 1985/86ல் இது நூற்றுக்கு 49.3 வீதமாக அதிகரித்தது! குறைந்த வருமானம் பெறும் நூற்றுக்கு 40 பேருக்கு 1973 தேசிய வருமானத்தில் கிடைத்தது, நூற்றுக்கு 15.1 வீதமே. 1985-86ல் இது 7.1 வீதமாக வீழ்ச்சி கண்டது.

இலங்கையை ஆக்கிரமிக்கும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு வரிச் சலுகைகளும் இலாபச் சுரண்டலுக்கான சகல வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவை தொழிலாளிக்கு வழங்கும் சம்பளம் ரூபா. 2,000. சமூகத்தின் ஒரு கரையில் செல்வமும் சுகபோகங்களும் குவிந்து கொண்டுள்ள அதே வேளையில் மறுகரையில் வறுமையும், பட்டினியும், போஷாக்கின்மையும், மரணமும் குவிந்து கொண்டுள்ளன.

இலங்கையின் முதலாளி வர்க்கம் அதனது பலவீனம், ஏகாதிபத்திய சார்பு, தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள் தொடர்பான குரோதம் என்பவற்றை அடியோடும், சந்தேகத்துக்கு இடமின்றியும் ருசுப்படுத்திக் கொண்டுள்ளது. 1948ல் யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய அமைப்பின் கீழ் திணிக்கப்பட்ட இலங்கை முதலாளித்துவ அரசினை யூ.என்.பி.-சி.ல.சு.க. முதலாளித்துவக் கட்சிகள் இரண்டும் "தேசிய அபிவிருத்தியின்" பேரால் ஒரு புறத்தில் தமிழர் விரோத இனவாதத்தினை தூண்டிவிட்டு அரச ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டும், மறுபுறத்தில் சமசமாஜ-கம்யூனிச-இ.தொ.கா. அமைப்புக்களின் காட்டிக் கொடுப்பின் மீதாகவும் நடாத்தி வந்தன. கடந்த 17 ஆண்டுகளில் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டம் எனப்படுவது வங்குரோத்து அடைந்து, வீழ்ச்சி கண்டு செல்லும் நிலைமையில் ஏகாதிபத்தியத்தின் புதிய தாக்குதல்களுக்குச் சேவை செய்வதன் மூலம் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை நடாத்திச் செல்ல மாறினர். 1948 தொடக்கம் ஜனநாயகத்தின் பேரால் நடாத்தப்பட்டு வந்த ஆட்சி அமைப்பினை, சர்வாதிகார அதிகாரம் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிக்கு மாற்றினர். இனவாத ஆதாளபாதாளத்தின் மூலம் ஆட்சியை நடாத்தும் முகமாக தமிழ் சிறுபான்மையினரை ஒடுக்குவதற்கென அமைக்கப்பட்ட "ஒற்றை ஆட்சி" தமிழ் ஒடுக்கப்படுவோரின் எழுச்சியால் வீழ்ச்சி கண்டுள்ளது. 17 வருடகால மக்கட் படுகொலை ஆட்சியின் பின்னர் யூ.என்.பி. அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் மீண்டும் மோசமான நெருக்கடிக்குள் வீழ்ந்துள்ளன.

ஆளும் வர்க்கத்தின் நெருக்கடிக்கான பின்னணி என்ன? யூ.என்.பி.யின் மக்கள் அடிப்படை அடியுண்டு போய்விட்டது. திரும்பவும் தொழிலாளர் வர்க்கத்தின் பல்வேறு பிரிவினரிடையேயும் கிராமப்புற ஏழைகள், இளைஞர்கள் இடையேயும் பதட்டம் பரவி வருகின்றது. இந்நிலைமையினுள் நேரடியான வெளிநாட்டு முதலீட்டினைத் தருவிக்கும் பொருட்டு ஆளும் வர்க்கம் உக்கிரமான தாக்குதலில் ஈடுபட நேரிட்டுள்ளது. உழைப்பினை குறைந்த விலைக்கு விற்கும் பொருட்டு வியட்னாம், சீனா, இந்தியாவின் முதலாளிகளுடன் உக்கிரமான போட்டியில் ஈடுபடவேண்டின் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை இரும்புச் சப்பாத்தினால் நசுக்க வேண்டும். கடந்த 17 வருடகாலத்தில் சுதந்திர வர்த்தக வலயங்களுக்குத் தருவிக்கப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீடு ரூபா. 2216 கோடி அல்லது 45 கோடி டாலர்களாகும். இந்நிலைமையையிட்டு முதலாளிகள் பதட்டம் அடைந்துள்ளனர். ஜுன் 26ம்

திகதி "கொழும்பு வர்த்தகர்கள் அவை" முன்னால் உரை நிகழ்த்திய சி.ல.சு.க. பிரதி தலைவியான சந்திரிகா குமாரணதுங்க 1993ல் இந்தியாவுக்கு வெளிநாட்டு உதவியாக 3,000 மில்லியன் டாலர்கள் கிடைத்த போதிலும் இலங்கைக்கு 300 மில்லியன் டாலர்களே கிடைத்தது என ஒப்பாரியிட்டார்.

உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் எஞ்சியுள்ள கல்வி, சுகாதாரம் போன்ற நலன்புரிச் சேவைகளைத் துடைத்துக் கட்டுவதைத் துரிதப்படுத்தும்படி நெருக்கி வருகின்றன. பிரமாண்டமான தொழிலாளர் சமுதாயத்தைக் கொண்ட தோட்டத்துறை, இலங்கை மின்சார சபை, ரெலிகொம், தபால், பெற்றோலியம் கூட்டுத்தாபனம், துறைமுகம், அரச வங்கிகள், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், புகையிரதம் போன்ற அரச வணிக நிறுவனங்கள் அனைத்தையும் தனியார்மயமாக்கும்படி கட்டளை கிடைத்துள்ளது.

ஏகாதிபத்தியவாதிகள் நேரடி முதலீட்டை அதிகரிக்கும் பொருட்டு "அரசியல் ஸ்திரப்பாட்டை" வேண்டி நிற்கிறார்கள. அதாவது, இலங்கையிலும் தமிழ் ஈழம் பிராந்தியங்களிலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை சர்வாதிகாரத்தினால் நசுக்குவதாகும். ஏகாதிபத்தியவாதிகளின் சிபார்சினை அமுலாக்கப் பந்தயம் பிடிக்க முதலாளி வர்க்கம் தீர்மானித்துள்ளது. அதற்கு இதுவரை காலமும் நிறுவியுள்ள இராணுவ-குண்டர் படைப் பலம் போதாது. 1988-89ல் உக்கிரம் கண்ட நெருக்கடியின் மத்தியில் மக்களை நசுக்க ஆளும் யூ.என்.பி., எதிர்க்கட்சியான சி.ல.சு.க. சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ.தொ.கா. அமைப்புக்களின் உதவியோடு. ஜே.வீ.பி. பாசிச அலையின் மீது பலம் கண்டது.

இப்போது மீண்டும் ஒரு தடவை தேர்தல் கோஷத்தின் மத்தியில் நெருக்கடியினால் குழம்பிப் போயுள்ள மத்தியதர வர்க்கப் பகுதியினரை தமது கட்சியைச் சூழத் திரட்டிக் கொண்டு, அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றவும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக பாசிச சக்திகளைக் கட்டவிழ்த்து விடவும் யூ.என்.பி.-சி.ல.சு.க. (பொதுஜன ஐக்கிய முன்னணி) தயாராகி வருகின்றன.

ஆளும் யூ.என்.பி. மக்களை அடக்கு முறைக்கு ஆளாக்குவதாலும் ஊழல்கள், சூழ்ச்சிகளாலும் பொதுஜன வெறுப்புக்கும் அபகீர்த்திக்கும் ஆளாகியுள்ளது. இந்நிலையில் முதலாளித்துவ சி.ல.சு.க. எல்லா வகையிலும் யூ.என்.பி.க்கும் மேலாக ஏகாதிபத்திய விதிமுறைகளை முன்னெடுப்பதாகச் சத்தியப் பிரமாணம் செய்து, முதலாளித்துவ ஆட்சியைக் காக்கும் பொறுப்பைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது. "உற்றார் உறவினர் முதலாளித்துவம்" அல்ல "மனிதாபிமான முகச்சாயல் கொண்ட முதலாளித்துவத்தை" நடாத்துவதாகக் கூறும் சி.ல.சு.க. தலைவர்களின் வாயடிப்புக்களின் இலக்கு மத்தியதர வர்க்கக் குழுக்களை அணிதிரட்டிக் கொள்வதேயாகும். இது பாசிச சக்திகளைக் கட்டியெழுப்ப சி.ல.சு.க. பக்கத்தில் இடம்பெறும் ஒரு முயற்சியாகும்.

முதலாளி வர்க்க ஆட்சியின் கீழ் மறுபுறத்தில் ஏகாதிபத்தியத் தலையீட்டின் அச்சுறுத்தல் வளர்ச்சி கண்டு வருகின்றது. முதலாளித்துவப் பிற்போக்கின் நனவான ஊதுகுழலான 'த ஐலண்ட்' பத்திரிகையின் ஒரு கட்டுரையின்படி அமெரிக்க சீ.ஐ.ஏ. வெளியிட்டுள்ள 500 பக்கங்கள் கொண்ட ஒரு அறிக்கையின்

படி இலங்கையினுள் ஐ.நா. தலையிடும் திட்டம் உள்ளது. இதற்கிடையே விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களைச் சந்திக்கும் பொருட்டு அமெரிக்கத் தூதுவர் அலுவலகம் "அனுமதி" கேட்டுள்ளது. பசுபிக் பிராந்திய ஐ.நா. படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் குழு ஒன்று "நல்லெண்ண ஆய்வு" தூதுப் பயணத்தில் ஈடுபட்டு யுத்த முனைக்குச் சென்று, இலங்கையின் இராணுவ அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளது.

தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் வளர்ச்சி கண்டுவரும் பிரமாண்டமான ஆபத்துக்கள் இவைகள் தான்.

## துரோகத் தலைவர்கள் முதலாளித்துவ முகாம்களுள்

இவ்வளவு தூரம் அழிவை உண்டுபண்ணிய நெருக்கடிக்குள்ளான முதலாளி வர்க்கமும் அதன் கட்சிகளும் சுதந்திரமாகச் செயற்பட முடிவது எப்படி? தொழிலாளர் வர்க்கம் சுயாதீன சக்தியாக முதலாளித்துவப் பிற்போக்குக்கு எதிராகத் தீர்க்கமான சவாலைத் தொடுக்க முடியாதிருப்பது எப்படி? இக் கேள்விகளுக்கான பதிலைத் தேடிக் கண்டுபிடிப்பது சகல போராளிகளதும் மாபெரும் அவசியமாகியுள்ளது.

அது பல தசாப்தங்களாக சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும், இ.தொ.கா.வும், இந்த அமைப்புக்களின் கூட்டாளிகளாகப் பின்னர் தோன்றிய நவசமசமாஜ கட்சி, மலையக மக்கள் முன்னணி, தொழிற் சங்க அதிகாரத்துவங்களும் இழைத்த துரோகங்களின் பெறுபேறாகும். இப்போது இக்கட்சிகளதும் அமைப்புக்களதும் காட்டிக் கொடுப்பு உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன. அத்தோடு அவை முதலாளித்துவக் கட்சிகளாகவும் தொழிற் சங்கங்கள் முதலாளித்துவ அரசினதும், எஜமானர்களதும் கோபரேட்வாத அமைப்புக்களாகவும் மாறியுள்ளன. இதன் மூலம் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான பிற்போக்குச் சக்திகளைக் கட்டியெழுப்பச் செயற்படுகின்றன.

1930பதுகளின் கடைப் பகுதியில் இருந்து 1950பதுகளின் முற்பகுதி வரை இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் ஏகாதிபத்தியத்துக்கும் தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் எதிரான தீர்க்கமான அரசியல் சக்தியாக உருவெடுத்ததோடு, ஒடுக்கப்படும் மக்களின் தலைமையையும் வகித்தது. தொழிலாளர் வர்க்கத்தினால் அதைச் சாதிக்க முடிந்ததற்குக் காரணம், நான்காம் அகிலத்தின் பிராந்தியக் கிளையாக இந்திய போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சியை கட்டியெழுப்பி, அதன் இலங்கை அலகாக லங்கா சமசமாஜக் கட்சி நிர்மாணிக்கப்பட்டதே. இக்கட்சி அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஏகாதிபத்தியத்தினையும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியையும் தூக்கி வீசி, சோசலிச வேலைத்திட்டத்தினை நடைமுறைக் கிடுகின்றதும், ஒடுக்கப்படும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றதுமான தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்தினை – தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை – நிறுவும் முன்நோக்குக்காகப் போராடியது.

போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சி இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தின் மிகப் பெரும்பான்மையினரும், பொருளாதாரத்தில் அன்று முக்கிய இடம் வகித்தவர்களுமான தோட்டத் தொழிலாளர்கள் இடையே வேரூன்றியதன்

மூலம் காலனித்துவ ஆட்சிக்கு எதிரான அணிதிரட்டலில் ஈடுபட்டது. காலனித்துவ ஆட்சியாளர்களை கிடுநடுங்கச் செய்த முல்லோயா, வேவஸ்ஸ போராட்டங்கள் இந்த ட்ரொட்ஸ்கிஸ்டுகளாலேயே தலைமை தாங்கப்பட்டது. 1948ல் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் இலங்கை முதலாளிகளுடன் சதி செய்து திணித்த சோல்பரி அரசியலமைப்புச் சட்ட ஆட்சியை எதிர்த்த ஒரே கட்சி போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சியே. 1948 ஆகஸ்டில் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை இரத்துச் செய்து, டீ.எஸ். சேனநாயக்கவின் யு.என்.பி. அரசாங்கம் கொணர்ந்த குடியுரிமை மசோதாவை அதே அடிப்படையில் போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சி வன்மையாக எதிர்த்தது. அந்த மசோதா, தமிழ்பேசும் தோட்டத் தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்துக் கொண்டு அவர்களுக்கு எதிராக இனவாதத்தினைத் தூண்டிவிடுவதன் மூலம் முழுத் தொழிலாளர் வர்க்கத்தினையும் பிளவுபடுத்தி பலவீனமாக்கத் தொடுக்கப்பட்ட தாக்குதல் என போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டியது. பீ.எல்.பீ.ஐ. தலைவர்கள் பின்னர் சமசமாஜ கட்சியின் வழியில் சென்று தோட்டத் தொழிலாளர்களை எதிர்க்கும் நிலைக்கு வந்ததற்கு அந்த அனைத்துலக நிலைப்பாட்டைக் கைகழுவிவிட்டதே காரணமாகும்.

1950 பதுகளில் சமசமாஜக் கட்சி இந்த வேலைத்திட்டத்தினைக் கைவிட்டு முதலாளித்துவ வர்க்க ஆட்சிக்கு இயைந்து போய், 1964ல் முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டரசாங்கத்தில் சேர்ந்தது. இதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீனத்தினை முழுமனே காட்டிக் கொடுத்து, தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் சகல நாசங்களுக்கும் கதவுகளைத் திறந்துவிட்டது. ஆரம்பத்தில் இருந்தே முதலாளித்துவச் சார்பு அரசியலில் ஈடுபட்ட ஸ்டாலினிசக் கட்சி இந்தக் காட்டிக்கொடுப்பின் நனவான சகபாடியாக விளங்கியது.

கடந்த 17 ஆண்டுகளில் இ.தொ.கா. தலைவர்கள் யு.என்.பி. ஆட்சியுடன் நேரடியாக கூட்டுச் சேர்ந்த அதே வேளையில் சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சிகள் யு.என்.பி. கட்டவிழ்த்துவிட்ட சகல தாக்குதல்களுடனும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இணைந்து கொண்டன. இக்கட்சிகள் தொழிலாளர் வர்க்கத்தினை ஸ்தம்பிதம் அடையச் செய்தன; தொழிலாளர் போராட்டங்களை சிதறடித்தன; இவை யு.என்.பி.யின் வட்டமேசை மகாநாட்டில் பங்குகொண்டன. இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு ஆதரவு வழங்கின; இனவாத யுத்தத்தின் சார்பில் பிரச்சாரம் செய்தன; கிராமப்புற படுகொலை இயக்கத்துக்கு உதவி வழங்கின. இப்போது இக்கட்சிகள் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களின் பேரில் சத்தியப் பிரமாணம் செய்யும் சி.ல.சு.க.வுடன் "பொது முன்னணி" பெயரிலான ஒரு கூட்டுக்கு முன்வந்துள்ளன. "யு.என்.பி. 16 வருட காலம் மேற்கொண்ட வேலைத் திட்டங்களை உடனடியாக பின்னடிக்கச் செய்ய முடியாது" என்ற தர்க்கத்தின் கீழ் இக்கட்சிகள், ஏகாதிபத்தியத் தாக்குதல்களைத் தொடர்ந்து தொடுக்கும் ஒரு அரசாங்கத்துக்கு சி.ல.சு.க.வுடன் தோள்கொடுக்க ஆயத்தமாகியுள்ளன.

ஏகாதிபத்திய அமைப்பினுள் தேசிய சீர்திருத்தவாதத்தினை முன்னெடுத்த கட்சிகளின் வீழ்ச்சியையும் அவை பிற்போக்காக மாறியதையும் இவை குறித்து நிற்கின்றன. உற்பத்தியின் பூகோளமயத்தின் கீழ் பூகோளத்தின் சகல

மூலைகளிலும் சுரண்டலில் ஈடுபட்டுள்ள ஏகாதிபத்தியம் "தேசிய சீர்திருத்தவாதத்துக்கு" இடமளிக்க மாட்டாது. தேசிய சீர்திருந்த வேலைத்திட்டத்துக்கோ அல்லது வேலைத்தலங்களில் தொழிலாளர்களின் உரிமைகளை காக்கும் வேலைத் திட்டத்துக்கோ அனைத்துலக ரீதியில் அணிதிரண்ட மூலதனத்திற்கு முகம் கொடுக்க முடியாது. இப்போது இக்கட்சிகளும் அமைப்புக்களும் "அபிவிருத்தியை" உண்டுபண்ணும் முகமாக ஏகாதிபத்தியத்தின் கீழ் இடம்பெறும் உற்பத்தியின் பூகோளமயமாக்கத்துக்கு ஒன்றுபட வேண்டும் எனக் கூறிக் கொள்கின்றன.

இலங்கையில் இந்தக் கட்சிகளின் வேலைத்திட்டத்தின் வீழ்ச்சியும், அவை ஏகாதிபத்தியத்துக்கு அப்பட்டமான முறையில் சேவையாற்றச் செல்வதும் அனைத்துலக ரீதியில் சகல பழைய தொழிலாளர் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் வீழ்ச்சிகண்டு, பிற்போக்கின் பக்கம் சென்றுள்ளதைக் காட்டும் உலகளாவிய நிலைமையின் வெளிப்பாட்டின் ஒரு பாகமாகும். சோவியத் யூனியனின் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் உள்ளிருந்து தலைநீட்டிய முதலாளித்துவப் போக்கு, இப்போது சோவியத் யூனியனை தகர்த்து எறிந்து ஏகாதிபத்தியவாதிகளின் கொம்பிரதோர் ஆட்சியாளர் ஆகியுள்ளனர். அமெரிக்காவின் AFL-CIO தொழிற்சங்க சம்மேளனமும் சரி, பிரித்தானியாவின் தொழிற்கட்சி, TUC அமைப்புக்களும் சரி நிதி மூலதனத்தின் ஏஜன்டுகளாகத் தொழிலாளர் வர்க்கத்துக்குத் தாக்குதல் தொடுக்கச் செயற்படுவதைச் சுட்டிக் காட்டுகின்றது.

அனைத்துலகிலும் அவ்வாறே இலங்கையிலும் பழைய தொழிலாளர் அமைப்புக்களின் தொழிற்பாடானது முதலாளிகளினால் குழம்பிப்போன மத்தியதர வர்க்கப் பகுதியினர் இடையே பாசிச சக்திகளை உருவாக்கவும், உருவாக்கிக் கொடுக்கவும் செய்யும் ஒரு முயற்சியாக உள்ளது.

**லங்கா சமசமாஜக் கட்சி:** இக்கட்சி முதலாளித்துவ சி.ல.சு.க.வுடன் பொதுஜன முன்னணி என்ற பேரில் முதலாளித்துவ முன்னணியில் சேர்ந்து கொண்டுள்ளது. ல.ச.ச.க. ஏகாதிபத்தியவாதிகள் சிபார்சு செய்துள்ள திறந்த பொருளாதாரக் கொள்கையை அங்கீகரிக்கும் அதே வேளையில் இலங்கையில் சோசலிசத்துக்குப் போராட முடியாது எனத் தீர்க்கமான முறையில் குறிப்பிட்டுள்ளது. ல.ச.ச.க. தலைவர் பேர்னாட் சொய்சா இது சம்பந்தமாக 1994 மே 19 'சமசமாஜய' பத்திரிகைக்கு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். இன்று இக்கட்சி முதலாளிகளுடன் தொடர்பு கொண்ட மத்தியதர வர்க்கத்தினர், தொழில்சார் நடவடிக்கைகளில் ஈடுபடும் உயர்மட்ட, கீழ்த்தர மத்தியதர வர்க்கத்தினர், மார்க்சிச விரோத பிரச்சாரகர்கள், தொழிற்சங்க அதிகாரிகளைக் கொண்டுள்ளது.

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி:** 1970-77ல் சமசமாஜ கட்சியுடன் கூட்டரசாங்கத்தில் நுழைந்து கொண்ட இக்கட்சி அதிலிருந்து விலகியதன் பின்னர் சி.ல.சு.க.வுடன் இனி கூட்டுக்கு செல்வதில்லை எனக் கூறியது. மீண்டும் சி.ல.சு.க.வுடன் சாய்ந்து கொண்டு, முதலாளித்துவ பொது முன்னணியில் இக்கட்சி இணைந்து கொண்டுள்ளது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ரூசியாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும், சீனாவிலும் முதலாளித்துவ புனருத்தாரணத்துக்கு முழுமனே ஆதரவளிப்பதோடு, இலங்கையினுள்

முதலாளித்துவ வேலைத்திட்டத்தினை முன்வைக்கும் ஒரு முதலாளித்துவக் கட்சியாக மாறியுள்ளது.

**நவ சமசமாஜக் கட்சி:** சமசமாஜக் கட்சியின் கூட்டரசாங்க அரசியல் காட்டிக்கொடுப்புடன் இணைந்து, நெருக்கடிக்கு உள்ளாகும் நிலையில் அதிலிருந்து வெளியேறிய ஒரு மத்தியதர வர்க்கக் கூட்டத்தினால் நிறுவப்பட்ட நவசமசமாஜக் கட்சி, கடந்த 17 ஆண்டுகளில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் சேர்ந்து சகல தீர்க்கமான சந்தர்ப்பங்களிலும் யூ.என்.பி. அரசாங்கத்தையும் முதலாளித்துவ வர்க்க ஆட்சியையும் காக்க முன்வந்தது. 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கும், இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கும் இக்கட்சி ஆதரவு வழங்கியது. கிராமப்புற படுகொலைகள் இடம்பெற்ற சமயத்தில் அரசாங்கத்துடனும் இராணுவ அதிகாரிகளுடனும் மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்த நவசமசமாஜக் கட்சி, மறுபுறத்தில் ஜே.வீ.பி. பாசிசத்துக்கும் வாழ்த்துக் கூறியது. நவசமசமாஜக் கட்சி, ஏகாதிபத்தியத்துக்கு வக்காலத்து வாங்கும் அனைத்துலக பப்லோ அமைப்பின் இலங்கைக் கிளையாகும். 1964ல் சமசமாஜக் கட்சி சி.ல.சு.க. அரசாங்கத்தில் சேருவதற்கு முன்னணியில் நின்று தொழிற்பட்டது இந்த அனைத்துலக பப்லோவாத அமைப்பே. இக்கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார உட்பட்ட பேர்வழிகள் எதிர்வரும் தேர்தலில் பொது முன்னணி வேட்பாளராக போட்டியிடும் அதே வேளையில் விக்கிரமபாகு கருணாரத்ன உள்ளடங்கலான பேர்வழிகள் வேறாகப் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போது இக்கட்சி ஜே.வி.பி. துண்டுதுகள்களை இணைத்து ஒரு பாசிச சக்தியைக் கட்டியெழுப்பும் அரசியலுக்கு தோள்கொடுத்து வருகின்றது.

நவசமசமாஜக் கட்சி தமது பெயரின் கீழ் பாசிச சக்திகளை அணிதிரட்டிய ஒரு குழுவை அமைத்து தேர்தலில் நிற்கப்போவதாக அறிவிக்கீப்பட்டுள்ளது. 1988-90 யூ.என்.பி. பயங்கரங்களுடன் சேர்ந்து ஒரு பாசிச இயக்கமாக பயங்கரங்களில் ஈடுபட்ட ஜே.வீ.பி.யையும், சிங்கள இனவாத சிறீலங்கா முற்போக்கு முன்னணியையும், இந்திய ஆளும் வர்க்கத்தினதும் ஆக்கிரமிப்பு இராணுவத்தினதும் பின்னர் இலங்கைப் படைகளதும் கூலிப் படையாக விளங்கிய ஈ.பீ.ஆர்.எல்.எப்.ம் இந்த குழுவில் சேர்க்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்:** கடந்த 17 ஆண்டுக்கால யூ.என்.பி. அரசாங்கத்தின் சகல கொலைகார தாக்குதல்களதும் நேரடிப் பங்காளிகளாக இ.தொ.கா.வும் அதன் தலைவர்களும் செயற்பட்டனர். தோட்டத் தொழிலாளர்கள் படுமோசமான ஒடுக்குமுறைக்கு உள்ளானமைக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் அவர்களின் சார்பில் பேசுவதாகக் கூறிக் கொள்ளும் தொண்டமான்-செல்லச்சாமியும் அவர்களின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுமே. தோட்டத் தொழிலாளர்களின் எதிர்ப்பு வெடிக்கும் நிலைமையுள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சிதறுண்டு போயிற்று. இப்போது தொண்டமான் செல்லச்சாமிக்கு இடையே யூ.என்.பி. ரிக்கற்றில் போட்டியிடுவதற்கான சண்டை இடம்பெற்று வருகின்றது. இந்த முதலாளிகள் அக்கறை கொண்டுள்ளது தமது முதலாளித்துவ சலுகைகளைப் பெருக்கிக் கொள்ள முழு தொழிலாளர் வர்க்கத்தையும் பலியிடு வதையிட்டே. தோட்ட

தனியார் மயமாக்கத்துக்கு இ.தொ.கா. தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

இவர்களின் சகல வேலைத்திட்டங்களும் பிற்போக்கினதும் அழிவினதும் வேலைத்திட்டங்கள். உழைக்கும் மக்களே! புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்வைக்கும் சோசலிச வேலைத்திட்டத்தினையும் ஜனநாயகப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் வேலைத்திட்டங்களையும் சூழ அணிதிரளுங்கள்! புரட்சித் தலைமையை கட்டியெழுப்ப ஒன்றுதிரளுங்கள்!

# தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு சோசலிச வேலைத்திட்டம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்கும் பொருட்டு சோசலிச வேலைத்திட்டத்தினை முன்வைக்கின்றது. ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ள தமிழ் மக்களும் வறுமைக்கு முகம் கொடுத்துள்ள கிராமப்புற விவசாயிகளும் தமது ஜனநாயக உரிமைகளை இந்த சோசலிச வேலைத்திட்டத்திற்குப் போராடுவதன் மூலமே பெற்றுக்கொள்ள முடியும்.

## தொழிலைக் காப்பாற்று! அனைவருக்கும் தொழில்!

கடந்த ஒன்றரைத் தசாப்தங்களாக சகல துறைகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் தொழில்களுக்கும் யூ.என்.பி. அரசாங்கத்தினதும் முதலாளித்துவ எஜமானர்களதும் தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி கட்டளைகளை அமுல் செய்வதன் மூலம் அரசாங்கத் துறையின் சகல வர்த்தகத் துறைகளும் தனியார் மயமாக்கப்பட்டதாலும் அரசாங்கத் திணைக்களங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டதாலும் ஏற்கனவே ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோரின் தொழில்கள் அழிக்கப்பட்டுள்ளது. சில கூட்டுத்தாபனங்கள் இழுத்து மூடப்பட்டன. தனியார் மயமாக்கத்தால் சில கூட்டுத்தாபனங்களில் ஊழியர் எண்ணிக்கை வெட்டப்பட்டது. அத்தோடு சுயவிருப்பின் பேரிலான ஒய்வுபெறும் திட்டத்தின் கீழ் தொழில்களை அழிக்கத் தூண்டும் வேலைத் திட்டத்தினையும் யூ.என்.பி. அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது.

பிரமாண்டமான எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் ஒட்டிக் கலைக்கப்படவுள்ள இடங்களில் தோட்டத்துறை ஒன்று. தோட்டத்துறையில் இலாபம் கிடைக்க வேண்டுமானால் "அனாவசியமான மனித மூலப்பொருளை அழிக்க வேண்டும்" என யூ.என்.பி. தலைவராக மீண்டும் நியமனம் பெற்றுள்ள காமினி திசாநாயக்க பெருந்தோட்ட அமைச்சராக இருந்த போது குறிப்பிட்டார். ஏற்கனவே தொழிலாளர்களின் வேலைநாள் எண்ணிக்கையை வெட்டுவது ஆரம்பமாகிவிட்டது. இளைஞர்கள் வேலையின்மையால் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடம்பெயர நேரிட்டுள்ளது. இனவாதத்திற்குத் தூபம் போட்டவண்ணம் மக்கட் படுகொலை இயக்கத்தின் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் தொழில்களை ஒழித்துக் கட்ட முதலாளித்துவ அரசாங்கமும், இப்போது தோட்ட நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு, வெளிநாட்டுக்

கம்பனிகளும் முன்வரலாம். தனியார் மயமாக்கப்படவுள்ள சகல அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் தொழில்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தனியார் துறையைச் சேர்ந்த அனேக பக்டரிகள் பொருளாதாரம் திறந்துவிடப்பட்டதால் நாசமாக்கப்பட்டு வருவதோடு அவற்றின் தொழிலாளர்களின் வேலைகளும் அழிக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறே பழைய பக்டரிகளில் புதிய தொழில்நுட்பத்தை நடைமுறைக்கிடுவது, தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்வதாக அமைந்துள்ளது. லங்கா கிளாஸ் கம்பனி இதற்கு நல்லதோர் புதிய உதாரணமாகும்.

அத்தோடு நிரந்தர வேலை முறையை அடியோடு ஒழித்துக் கட்டும் திட்டம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் ஆதிக்கத்துக்கு உட்படும் பொருளாதாரத்தின் கீழ் நாடுபூராவும் நடைமுறைக்கிடப் படுகின்றது. ஜீவிய கால ஸ்திரப்பாடு, நிலையான வேலை நேரம், ஓய்வூதியம், ஊழியர் சேமலாப நிதி வசதிகளைக் கொண்டிருந்த தொழில் நிலைமை இன்று கடந்த காலத்துக்கு உரியதாய் போய்க் கொண்டுள்ளது. கொந்தராத்து அல்லது நாட்சம்பள வேலைமுறை இப்போது அமுலுக்கு வந்துள்ளது. பயிற்சியாளர்களை ஈடுபடுத்தல், பயிற்சிபெறும் ஆசிரியர்களைத் திரட்டல் என்பன இத்திட்டத்தின் ஒரு பாகமாகும். சுதந்திர வர்த்தக வலயம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் இந்த விதத்தில் உழைப்பை சூறையாடும் களமாக நிர்மாணிக்கப் பட்டுள்ளது. "கூலிக்கு அமர்த்தி வெளியேற்றும் கொள்கை" (hire and fire policy) உழைப்புச் சந்தையில் முதலாளி வர்க்கத்தின் விதிமுறையாக உறுதிப்பட்டு வருகின்றது. நவீன தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி நாட்டுக்கு நாடு இலாபமான உழைப்பைத் தேடி ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் முதலீடுகளை மாற்றி வருகின்றன. உலகம் பூராவும் இலாபத்துக்காக இடம்பெறும் அலைச்சலுடன் இம்முறை இணைந்து கொண்டுள்ளது.

யூ.என்.பி. அரசாங்கம் வேலையில்லாப் பிரச்சினையை தீர்ப்பது பற்றி வாயடித்துக் கொள்கிறது. ஆனால் உத்தியோக பூர்வமான புள்ளிவிபரங்களின் படி உழைப்புப் படையில் நூற்றுக்கு 14-15 வீதத்துக்கு இடைப்பட்டோர் வேலையற்றோர் ஆவர். ஒவ்வொரு ஆண்டும் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானோர் பாடசாலையில் கல்வி நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு வேலை தேடுவோர் கியூவில் சேர்ந்து கொள்கின்றனர். சுதந்திர வர்த்தக வலயம் எனப்படுவதை அமைத்ததன் நோக்கம் தொழில் பிரச்சினையை தீர்ப்பதே என யூ.என்.பி. அரசாங்கம் மோசடியான விதத்தில் குறிப்பிட்டது. கடந்த 16 ஆண்டுகளில் சுதந்திர வர்த்தக வலயங்களில் சிருஷ்டிக்கப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை 104,220. இவற்றுடன் இணைந்த சேவைகள் மூலம் வழங்கப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை சுமார் 3 இலட்சம் எனக் கூறப்படுகின்றது. அதிக அளவிலான வேலையின்மையை கொண்டிருப்பது ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களதும் ஏகாதிபத்திய சார்பு முதலாளிகளதும் நனவான பொருளாதார வேலைத் திட்டமாக உள்ளது. அது மேலும் மேலும் குறைந்து செல்லும் சம்பளத்துக்கு தொழிலாளர்களைப் பயமுறுத்தி, அடிமைப்படுத்தி வைத்திருக்கக் கையாளப்படும் ஒரு ஆயுதமாக முதலாளிகளால் மாற்றப்பட்டுள்ளது.

வேலைநீக்கம் செய்யும், வேலைநீக்கம் செய்யத் திட்டமிடும் பக்டரிகள்,

தோட்டங்களில் உள்ளமர்ந்து கொண்டு, அப்போராட்டங்களைச் சூழ ஒடுக்கப்படுவோரின் ஆதரவினைத் திரட்டிப் போராடத் தொழிலாளர் முன்வர வேண்டும். தொழில்களை அழிப்பதில் அரசாங்கத்தினதும் முதலாளித்துவ எஜமானர்களதும் ஏஜன்டுகளாகச் செயற்படும் கட்சிகளதும், தொழிற் சங்கங்களதும் அதிகாரிகளை துரத்தியடித்து, பக்டரி உள்ளமர்வு போராட்டக் கமிட்டிகளை அமைக்க வேண்டும். இவை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்க வேண்டும். தொழில் காக்கும் போராட்டத்தினை ஒழுங்கு செய்வதற்கான பாதை இதுவே.

● வேலைநீக்கம் செய்யப்படும் சகல தொழிலாளர்களுக்கும் உரிய சம்பளத்தை கொடு! திரும்பவும் சேவைக்கு அமர்த்தும் போதும் அதே சம்பளம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். ● கொந்தராத்து, நாட்சம்பள தொழிலாளர் நிலைமையை ஒழித்து, சகல தொழிலாளர்களதும் தொழில் ஸ்திரப்பாட்டையும் தொழிலுடன் இணைந்த ஏனைய உரிமைகளையும் வழங்கு! ● நவீன தொழில் நுட்பத்தினை பிரயோகிக்கும் இடங்களில் சம்பளம், சேவை நிலைமைகள் வெட்டப்படாமல் கிழமைக்கு 30 மணித்தியாலம் வரை வேலை நேரத்தினை குறைத்து அனைவருக்கும் தொழில் வாய்ப்பை வழங்கு! ● தமிழர் விரோத இனவாத யுத்தத்துக்கும், கமிசன் அடிப்புக்கள், ஊழல்கள், ஆளும் வர்க்கத்தின் சுகபோகங்களுக்கும் கோடானுகோடி நிதியைக் கீழ்ப்படுத்துவதை நிறுத்து! நிதிக் கம்பனிகளை பராமரிக்க அரசாங்கம் வழங்கிய நூற்றுக்கணக்கான கோடி ரூபாக்களை திரும்பப் பெறு! முதலாளிகளுக்கு வங்கிகள் நூற்றுக்கணக்கான கோடிகளை வழங்கி, எலும்பு நக்கிய கடன்களை திரும்பப் பெறு! இந்த நிதிகளை திட்டமிட்ட புதிய கைத்தொழில்களை அமைக்கவும், ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள் முதலான பொதுஜன அமைப்பு அமைக்கவும், பெருந்தெருக்கள், வீடமைப்பு திட்டங்கள் அமைக்கவும் பயன்படுத்துவதன் மூலம் இலட்சக் கணக்கான புதிய தொழில்களை உருவாக்கு!

## வறியோர் உதவி மானியத்தை காப்பாற்று

மனிதஇன அபிவிருத்தி பற்றி யூ.என்.பி. அரசாங்கம் பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள அதே வேளையில் சமூகத்தின் ஒரு புறத்தில் வறுமை குவிந்து கொண்டு வருகையில் மறுபுறத்தில் சுகபோகவாழ்க்கை குவிந்து கொண்டுள்ளது. தொழிலாளர்கள், ஏழைகள், சிறார்கள் இடையே வறுமை பரவத் தொடங்கியுள்ளது. சமூகத்தின் வருமான வேறுபாடு பிரமாண்டமான முறையில் பரந்து வருகின்றது.

பல தசாப்தங்களாக தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள் போராட்டங்கள் மூலம் வெற்றி கொண்டு, பேணிக்காத்த உணவு உதவி மானியம் ஒழிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக உருவாக்கப்பட்ட உணவு முத்திரைத் திட்டம் பிரேமதாச ஆட்சியில் ஒழிக்கப்பட்டது. வறுமையை ஒழித்து 'இல்லாதோரை' 'உடையோர்' ஆக்குவது பற்றிய கதையளப்புக்களுடன் சிருஷ்டிக்கப்பட்ட 'ஜனசவிய', உணவு மானியம் முறையை அடியோடு ஒழித்துக் கட்டவே உருவாக்கப்பட்டது. 'ஜனசவிய' வின் கீழ் உணவு முத்திரை, ஏழைகள் வீதிகள் வெட்டுதல், கால்வாய்கள் துப்புரவாக்குதல் போன்ற கூலியற்ற அடிமை வேலைகளில்

ஈடுபடாமல் பெற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகிவிட்டது. சுயதொழில் முறை எனப்படுவது வறுமையில் பொதுமக்களைத் தலைமூழ்கச் செய்வதாக அல்லாது அபிவிருத்திக்கு இட்டுச் செல்லவில்லை என்பது நடைமுறை ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் உதவி மானியமும் மீனவர் உதவி மானியமும் ஒழிக்கப் பட்டதால் இலட்சக் கணக்கான மக்கள் அரைப் பட்டினி நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களின் சீருடையையும் மதிய போசனத்தையும் வெட்டித் தள்ளிய விஜேதுங்க அரசாங்கம், இப்போது அவற்றை வழங்குவதாகக் கூறியிருப்பது கருணையினால் அல்ல. விலைவாசிக் குறைப்புடன் சில உதவி மானியங்களையும் வழங்கப் போவதாக விஜேதுங்க அரசாங்கம் கடந்த சில வாரங்களாக அறிவித்து வந்தது. இவை எல்லாம் யூ.என்.பி. அரசாங்கம் நாசமாக்கிய உதவி மானியங்களுக்கு முலாம் பூசவும் போதாதவை. உதவிமானியம் வழங்கும் தேர்தல் குண்டின் மூலம் வாக்குகளை கொள்ளையடித்து மீண்டும் ஆட்சிக்கு வரவும், வட்டிகுட்டியுடன் சேர்த்துத் திரும்பவும் பறித்துக் கொள்ளவும் விஜேதுங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இனவாத யுத்தத்தினை நடாத்தும் பொருட்டு உதவிமானியம் உட்பட சகல வாழ்க்கைத் தரங்களையும் வெட்டித் தள்ள வேண்டும் என ஆளும் வர்க்கம் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் போதித்து வருகின்றது. இனவாத யுத்தத்தின் அடக்குமுறைக்கு பொதுமக்களை ஆட்படுத்துவதோடு மட்டுமன்றி உதவிமானிய அழிப்பு மூலம் வறுமையை பரவச் செய்வது ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு இலாபகரமான உழைப்பை விற்பனை செய்யும் நடவடிக்கையுமாகும்.

இதனால் ஏற்பட்டுள்ள அழிவினை நாடுபூராவும் தற்கொலை அபிவிருத்தி கண்டு வரும் வேகம் சுட்டிக்காட்டுகின்றது. ஏழை விவசாயியோ அல்லது தொழிலாளியோ அல்லது வேலையற்ற இளைஞனோ தற்கொலை செய்து கொள்ளாமல் ஒரு கிழமை கழிந்து செல்வது அரிதாகிவிட்டது. மறுபுறத்தில் முதலாளிகளும் உயர் மத்தியதர வர்க்கத்தினரும் சகல சுகபோகங்களையும் அனுபவித்துக் கொண்டுள்ளனர். அவர்களின் உல்லாசக் களியாட்டுக்களுக்காக சகல வசதிகளும் நிர்மாணிக்கப்படுகின்றன. ஆனால் அவர்களோ எதையுமே உற்பத்தி செய்யாத ஒட்டுண்ணிகள் ஆவர். இந்தச் சமூக நிலைமையை அடியோடு தூக்கிவீச வேண்டும்.

● வெட்டப்பட்ட சகல உதவி மானியங்களையும் திரும்பவும் வழங்கு! அவற்றை அவசியமான அளவுக்கு அபிவிருத்தி செய்! ● தொழில் கிடைக்கும் வரை சகல இளைஞர்களுக்கும் நாகரீகமான வாழ்வுக்குப் போதிய வாழ்க்கை உதவி மானியம் வழங்கு! ● பாடசாலை மாணவர்களின் மதிய போசனம், மற்றும் கல்வி வசதிகளை வழங்கு! விவசாயிகள் உதவி மானியத்தை மீண்டும் வழங்கு! ● வயோதிபர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் ஓய்வுதியம், உதவித் திட்டம், சுகாதார வசதிகள் வழங்கு!

## வாழ்க்கைத் தரத்தைப் பேணு

கடந்த தசாப்தத்தில் வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1021ஆல் அதிகரித்தது.

1984ல் 553.1 ஆக இருந்த வாழ்க்கைச் செலவுப் புள்ளி, 1994 ஏப்பிரலில் 1574 ஆக அதிகரித்தது. அரசாங்கத்தின் மோசடி உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்களின் படி கூட உழைக்கும் மக்களின் சம்பளம் கரைந்து போயுள்ளது. 1952ல் வாழ்க்கைச் செலவைக் கணக்கிடும் போது சாதாரண ஒரு தொழிலாளி குடும்பம் குறைந்த மட்டத்தில் ஜீவிக்க ரூபா 202.40 சதம் சம்பளம் அவசியம் எனக் கணிக்கப்பட்டது. இன்று அந்த மட்டத்தில் ஜீவிக்க குறைந்த பட்சம் ஒரு தொழிலாளி குடும்பத்துக்கு ரூபா. 3,500/- அவசியமாக உள்ளது. தொழிலாளர்களின் பஸ், புகையிரத கட்டணங்கள் பல மடங்கு அதிகரித்துள்ளன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஒரு தொடர்ச்சியான போக்காகும். புதிதாகச் சேவைக்குத் திரட்டப்படும் சகல இளம் தொழிலாளர்களதும் சம்பளம் பட்டினிக் கூலியாக உள்ளது. குறைந்த சம்பளத்துக்கு உழைப்பை கொள்ளையடிக்கும் முகமாகவே முதலாளிகள் பெண்களின் உழைப்பை பயன்படுத்த திரும்பியுள்ளனர். தோட்டத்துறையில் வேலை நாள் எண்ணிக்கை, சம்பள வெட்டுக்கான திட்டமாக உள்ளது. சுதந்திர வர்த்தக வலயத்தின் நாளாந்த இலக்கைப் பூர்த்தி செய்யும் வரை தொழிலாளர்களிடமிருந்து வேலைவாங்கப்பட்ட போதிலும் அந்த மேலதிக நேரத்திற்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை. வருமானத்தைச் சரிக்கட்டும் முகமாக அநேக நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் தமது ஓய்வினைக் குறைத்துக் கொண்டு, மேலதிக சேவையில் அல்லது. மேலதிக தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

உழைப்புக்காக செலவினைக் குறைந்த பட்சமாக்குவதன் மூலம் உபரி உழைப்பின் பெறுமதியை உயர்த்தும் பொருட்டு தொழிலாளர்கள் போராட்டங்கள் மூலம் வென்றெடுத்த குறைந்தபட்ச சம்பள வரையறைகள் அகற்றப்பட வேண்டும் என்பது ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் கோஷமாக உள்ளது. இந்நிலைமையினுள் குறைந்தபட்ச சம்பளத்துக்கான போராட்டம் தீர்க்கமானதாகியுள்ளது.

● தொழிலாளியின் குறைந்த பட்சச் சம்பளத்தை ரூபா. 5000/- ஆக்கு! பெண் தொழிலாளர்களுக்கு ஆண் தொழிலாளர்களுக்கு சமமான சம்பளம் கொடு! தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஏனைய துறைகளைச் சேர்ந்த கொந்தராத்து, அமய தொழிலாளர்களுக்கும் நிரந்தர மாதச் சம்பளம் வழங்கு! ● வாழ்க்கைச் செலவுப் புள்ளியின் உயர்வுக்கு ஏற்ப அதற்குச் சமானமான முறையில் உயர்ந்து செல்லும் சம்பளம் வழங்கு! ● ஓய்வூதியம், வேலையற்றோரின் வாழ்க்கை உதவிப் படிகளை அதே விதத்தில் வாழ்க்கைச் செலவுப் புள்ளியின் படி தயார் செய்!

## வீட்டுப் பிரச்சினையை தீர்த்தல்

வீடு அவசியமான சகல குடும்பத்தினரும் வீடு பெற்றுக் கொள்ளும் வசதி செய்து தரப்படவேண்டும். "உதாகம இயக்கம்" உட்பட 10 இலட்சம் வீடுகளின் திட்டம் பற்றி அரசாங்கம் பறைசாற்றிக் கொள்கிறது. எனினும் முதலாளித்துவத்தின் உள்ளே என்றும் எந்தவொரு நாட்டிலும் வீடில்லாப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படாதது மட்டுமன்றி உக்கிரமாக்கவும் பட்டுள்ளது. கொழும்பு மாநகரம் சேரிகளால் நிரம்பி வழிகின்றது. அந்த நிலங்களை

முதலாளிகளின் தேவைகளுக்காகச் சுவீகரிக்கும் போது பொதுமக்கள் தூர மாகாணங்களுக்கு கலைக்கப்படுகின்றனர். சகல முக்கிய நகரங்களிலும் வீடில்லாத மக்கள் பெருந் தெருக்களில் ஜீவிக்கிறார்கள். கிராமப்புற மக்களில் பெரும்பான்மையானோர் எதுவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல் ஓலையால் வேய்ந்த வீடுகளில் வசிக்கிறார்கள்.

சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழிலாளர்கள் ஓலைக் குடிசைகள் போன்ற 'போடிங்கு'களில் வாழ்கிறார்கள். தனியொரு அறையினுள் இரண்டு மூன்று தொழிலாளர் யுவதிகள் மூட்டை முடிச்சுக்களுடன் சகலதையும் செய்து கொள்ள வேண்டும்.

உலக வங்கியின் நலன்புரி சேவைகள் வேலைத்திட்ட வெட்டின் கீழ் வீட்டுக்கான செலவுகளை முழுமனே வெட்டும்படி சிபார்சு செய்யப்பட்டுள்ளது. முதலாளிகள் தமக்கென கோடானுகோடி செலவில் மாட மாளிகைகளும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களும் கட்டிக் கொள்ளும் ஒரு நிலையிலேயே தொழிலாளர்களும் ஏழைகளும் இந்நிலைமைக்கு முகம் கொடுக்கிறார்கள்.

● வசதிகள் கொண்ட குறைந்த வாடகை வீடுகளை அமைக்க பணம் வழங்கு! ● தேவைக்கு மேலதிகமாக வீடுள்ள அனைவரதும் வீடுகளை அரசுக்கு சுவீகரித்துக் கொண்டு வீடு இல்லாதோருக்கு வழங்கு! ● சகல வீடுகளுக்கும் தண்ணீர், மின்சாரம் உட்பட சகல அடிப்படை வசதிகளையும் வழங்கு!

## இலவசக் கல்வி முறையை உறுதி செய்

முதலாளித்துவ கூட்டரசாங்கத்தில் ஆரம்பித்து யூ.என்.பி. அரசாங்கத்தின் கீழ் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ள கல்வி வெட்டு இப்போது இலவசக் கல்வியை முழுமனே துடைத்துக்கட்டும் நிலையை எட்டியுள்ளது. கல்விச் செலவினங்கள் வெட்டப்பட்டுள்ளன. 1960ல் கல்விக்காக மொத்த தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 6 வீதம் ஒதுக்கப்பட்டது. இன்று அது நூற்றுக்கு 2.8 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. கல்வியை சந்தைச் சக்திகளுக்கு கீழ்ப்பட்ட இலாபம் கறக்கும் வியாபாரமாக மாற்றுவது ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் புதிய கோட்பாடாகும். ஆதலால் ஏழைச் சிறார்களின் பாடசாலைக்கான அரசாங்கச் செலவினங்கள் வெட்டப்படும் அதே வேளையில் முதலாளிகளதும், உயர் மத்தியதர வர்க்கத்தினரதும் பிள்ளை குட்டிகள் ஆண்டொன்றுக்கு இலட்சக் கணக்கில் செலவிட்டு கல்வி கற்கக் கூடிய தனியார் பாடசாலைகள் உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளால் நடாத்துப்பட்டு வருகின்றன. பாடசாலை கல்வி வசதிகள் வெட்டப்படுவதால் மாணவர்கள் ரியூசன் வகுப்புக்களுக்குப் பணம் செலவிட்டு, நடுரோட்டில் அலைய நேரிட்டுள்ளது.

வெண்கட்டி தொடக்கம் பாடசாலை திருத்த வேலைகள் வரையிலான சகல செலவுகளும் ஏழைப் பெற்றோர்களின் மேல் திணிக்கப்பட்டுள்ளது. பாடசாலைக் கல்வியை நேரடியாக கட்டணங்களுக்குக் கீழ்ப்படுத்தும் பொருட்டு பாடசாலை அபிவிருத்தி சபை ஆயுதம் நீட்டப்பட்டுள்ளது. அநேக கிராமப்புற பகுதிகளிலும் சிறப்பாகத் தோட்டப் பகுதிகளிலும் இன்னமும் மாட்டுக் கொட்டில்கள் போன்ற பாடசாலைகளே இருந்து வருகின்றன. கல்வி

வெட்டின் ஒரு பாகமாக ஆசிரியர்களை ஓய்வு பெறச். செய்ய வைக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் அமுலாக்கியது. போதுமான ஆசிரியர்கள் இல்லாததொரு நிலையிலேயே அங்ஙனம் செய்தது. அத்தோடு ரூபா. 1000/- சம்பளத்துக்கு பயிற்சிபெறும் ஆசிரியர்களையும், எதுவிதமான கட்டணமும் செலுத்தாமல் தொண்டர் ஆசிரியர்களையும் ஈடுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இதற்கிடையே ஆசிரியப் பயிற்சித் திட்டமும் வெட்டப்பட்டு வருகின்றது. ஆசிரியர்கள் கல்வியை உரிய விதத்தில் வழங்குவதற்கு அவசியமான வசதிகள் தரப்படுவதில்லை.

பல்கலைக்கழகப் போதனையை தனியார் துறையிடம் கையளிப்பதும் கட்டணத்துக்கு உள்ளாக்குவதும் ஆரம்பமாகியுள்ளது. ஒரு வருடத்தில் பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதி பெறும் மாணவர்களிடையே அப்பாக்கியம் மூன்றில் ஒரு பங்கினருக்கே கிடைக்கின்றது. அவர்களுக்கு அவசியமான விடுதிகள் கிடையாது. நூல்நிலைய வசதிகள் இல்லை. ஏழை மாணவர்கள் கல்வி கற்பதற்கு அவசியமான உதவி கிடையாது.

தொழில்பயிலுனர் பயிற்சியானது குறைந்த சம்பளத்துக்கு உழைப்பைச் சுரண்டும் இயக்கமாக மாற்றப்பட்டுள்ளது. கலாச்சார, கலை, விஞ்ஞான கல்வியில் அபிவிருத்தி இல்லை. உள்ள துறைகளும் வெட்டப்பட்டு வருகின்றன. ஆய்வு கல்வி எனக் கூறும் ஒன்று கிடையவே கிடையாது.

கல்வி வசதிகளுக்கான பிரச்சாரத்தில் ஈடுபடும் மாணவர்கள் படுகொலைக்கு உள்ளாகும் அளவுக்கு அரச ஒடுக்குமுறை தொடுக்கப்படுகின்றது. மாணவர்கள் ஜனநாயக ரீதியில் அணிதிரள்வதற்கான வாய்ப்புக்கள் நசுக்கப்பட்டுள்ளன.

கல்வி முறையை முன்னேற்றும் பொருட்டு பிரமாண்டமான நிதி வளத்தினை தயார் செய்யப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் யோசனை தெரிவிக்கின்றது. அவசியமான சகலருக்கும் இலவச மதச்சார்பற்ற கல்வியை வழங்குவது அரசின் பொறுப்பாகும்.

● அவசியமான அளவு பாடசாலைகளை நிறுவு! சகல பாடசாலைகளுக்கும் சமமான வசதிகள், அவசியமான ஆசிரியர்களை தயார் செய்! ● சித்திபெறும் சகல மாணவர்களுக்கும் பல்கலைக்கழக கல்வி வழங்க நடவடிக்கை எடு! இணைப்பு பல்கலைக்கழக மோசடியை நீக்கு! ● விளையாட்டு, கலை முதலான ஆற்றல்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய கல்வி வசதிகளை வழங்கு! ● ஆசிரியர் பயிற்சி இன்றியமையாதது. ஆசிரியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்கவும் கல்வியை உரிய முறையில் மேற்கொள்ளவும் வசதிகள் வழங்கு! ● மாணவர்கள் அமைப்புரீதியில் அணிதிரளும் ஜனநாயக உரிமையை வழங்கு! ● கல்வி பாடத்திட்டத்தை தீர்மானிக்கும் பொருட்டு சகல கல்வி துறையிலும் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படுவோரையும், கல்வியாளர்களையும் கொண்ட கமிட்டிகளை நிறுவு!

## இலவச சுகாதார சேவையை உறுதி செய்

இலவசக் கல்வியைப் போலவே இலவச சுகாதார சேவையும் யூ.என்.பி. அரசாங்கத்தினால் சேடமிழுக்கச் செய்யப்பட்டுள்ளது. கூட்டரசாங்க நிதி அமைச்சர் என்.எம். பெரேராவின் காலத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சுகாதார சேவை வெட்டு இப்போது ரூபா. 100-200/- செலுத்தி தனியார்

வைத்திய நிலையங்களில் சிகிச்சை பெற வேண்டிய நிலைமையை மோசமாக்கி உள்ளது. தனியார் ஆஸ்பத்திரி முறை, சுரண்டலுக்கான வியாபாரமாக மாற்றப்பட்டுள்ளது.

அவசியமான மருந்து வகைகள் ஆஸ்பத்திரிகளில் இல்லை. தங்கி சிகிச்சை பெறும் வசதிகள் இல்லை. அவசிய அளவிலான டாக்டர்கள், தாதிகள் உட்பட்ட அலுவலர்களோ அல்லது இரசாயன கூடங்களோ இல்லை. ஐந்து சதமாக இருந்த அஸ்பிரின் வில்லை ஒரு ரூபாவாக உயர்ந்துள்ளது. அத்தியாவசியமான மருந்து வகைகள் பன்னாட்டு மருந்து கம்பனிகாரர்களால் தினமும் விலை அதிகரிக்கப்படுகின்றது. நோயாளிகள் இவற்றை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

சிறிது காலத்துக்கு முன்னர் கட்டுப்படுத்தப் பட்டதாகக் கருதப்பட்ட மலேரியா, காசநோய், போன்றவை மீண்டும் தலை உயர்த்தத் தொடங்கியுள்ளன. ஆசியாவில் ஏட்ஸ் நோய் கடந்த ஆண்டில் எட்டு மடங்கால் அதிகரித்துள்ளது. இலங்கையிலும் இதே வேகத்தில் பரவி வருகின்றது. சுகாதார சேவை செலவு வெட்டு, ஆஸ்பத்திரி சேவையை முழுமனே கட்டணங்களுக்கு கீழ்ப்படுத்த உலக வங்கி கட்டளையின் கீழ் இடம்பெற்று வரும் வேலைத்திட்டம், முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் கீழ் சுகாதார சேவை மீண்டும் தலையெடுக்க முடியாது என்பதை ஊர்ஜிதம் செய்துள்ளது.

● சகலருக்கும் நவீன வைத்திய முறையின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட ஆஸ்பத்திரி முறையை வழங்கு! தனியார் ஆஸ்பத்திரிகளை அரசு பொறுப்பேற்க வேண்டும்! ● ஆஸ்பத்திரி, நோய் ஆராய்ச்சி நிலையம், மகப்பெற்று ஆஸ்பத்திரிகள் தீவின் சகல இடங்களிலும் மக்கள் வசதிகளைப் பெற்றுக் கொள்ளைக் கூடிய இடங்களில் அமைக்கப்படுவது அவசியம். ● போதுமான அளவு டாக்டர்கள், தாதிகள், வைத்திய தொழில்நுட்பவியலாளர்கள் உட்பட்ட ஆஸ்பத்திரி, சுகாதார ஊழியர்களுக்குப் பயிற்சி அளி! அவர்களுக்கு வேண்டிய வசதிகளை வழங்கு! ● நோய்த் தடுப்புக்கு அவசியமான வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்!

## பாதுகாப்பான சேவை நிலைமைகள்

சேவை நிலைமைகளை குறைப்பது நவீன உழைப்புச் சுரண்டலில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. அது இலாபத்தைக் காக்கும் பொருட்டு முதலாளித்துவ எஜமானர்கள் எடுக்கும் நடவடிக்கையாகும். அதன் பெறுபேறாக தொழிலாளர்கள் பூரண அனாதரவான நிலைமைக்குள் தள்ளப்படுவதோடு அடிமைகள் போல் வேலை வாங்கப்படுகின்றார்கள்.

ஏகாதிபத்திய காலனித்துவ ஆட்சியின் கீழ் இந்நாட்டுக்கு அடிமைகளைப் போல் பலாத்காரமான முறையில் கொணரப்பட்ட தோட்ட தொழிலாளர்களின் நிலைமையில் அடிப்படை மாற்றம் இல்லை. கடந்த காலத்தில் வென்றெடுக்கப்பட்ட சேவை நிலைமை ஏதும் இருப்பின் அதுவும் இன்று வெட்டப் படுகின்றது.

தொழிலாளர்களின் வாழ்க்கையை ஆபத்துக்குள் தள்ளி நாசமாக்கும் புதிய சுரண்டல் மட்டத்துக்கு உயர்த்துவதற்கு சுதந்திர வர்த்தக வலயம் நல்ல உதாரணம். தாய்லாந்திலும் சீனாவிலும் சுதந்திர வர்த்தக வலயங்களில்

தொழிலாளர்கள் கூட்டோடு தீயில் அகப்பட்டு வெந்து மாண்டதற்குச் சமானமான நிலைமை, இலங்கைச் சுதந்திர வர்த்தக வலயங்களிலும், அந்த சலுகைகளுடன் நிர்மாணிக்கப்பட்ட கைத்தொழில்களிலும் இருந்து வருகின்றது. 1993ல் கொரியா சிலோன் கம்பனியின் பிரேமலால் ஜயக்கொடி என்ற தொழிலாளி பழுதடைந்து போய்க் கிடந்த இயந்திரத்தில் பலாத்காரமான முறையில் சேவைக்கு அமர்த்தப்பட்டதால் மரணமானார். அக்கம்பனியில் இவ்வாண்டு மின்சார கோளாறினால் ஏற்பட்ட தீயினால் தொழிலாளர்கள் காயமடைந்தனர். கடந்த ஆண்டில் பாட்லிட் இரசாயன பக்டரியில் சகல தொழிலாளர்களும் நஞ்சு உடலில் பரவியதால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள். அன்சல் லங்கா கூட்டுத்தாபனத்தில் தொழிலாளர்கள் விஷத் திரவியங்களில் இருந்து பாதுகாப்பற்ற முறையில் ஆபத்துக்கு பலியாகியுள்ளார்கள். தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பான உபகரணங்கள் வழங்கப்படுவதில்லை. உணவு சமைக்க இடம், மலசலகூடம், தண்ணீர் வசதிகள் அவசியமான அளவு இங்கு கிடையாது. விபத்துக்களின் போது தொழிலாளர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல வாகன வசதி கிடையாது. சுதந்திர வர்த்தக வலயங்களில் வைத்திய நிலையம் முதலாளித்துவ எஜமானர்களின் தேவைக்கு ஏற்ப தொழிலாளர்களைச் செயற்பட வைக்கும் நிறுவனமாக இயங்குகின்றது.

அரசாங்கத்தின் செலவு வெட்டின் கீழ் அரசாங்க ஊழியர்களின் வசதிகள் வெட்டப்பட்டுள்ளன.

அஸ்பெஸ்டஸ், இரசாயன திரவியங்கள் முதலியவற்றால் உருவாகும் தொழில்சார் நோய்கள் பரவி வருகின்றன.

பாதுகாப்பான சேவை நிலைமைகளை பெற்றுக் கொள்வது தொழிலாளர்களின் பிரமாண்டமான அவசியமாகியுள்ளது.

● சகல நிறுவனங்களிலும், வேலைத் தலங்களிலும் தொழிலாளர் கமிட்டிகளை அமைப்பதன் மூலம் தொழில்களின் பாதுகாப்பு நிலைமைகளையும் சுகாதார நிலைமைகளையும் ஆராய்ந்து, அவசிய நடவடிக்கைகளை சிபார்சு செய்வதும் அவற்றை உறுதி செய்வதும் அவசியம். ● பாதுகாப்பற்ற தொழில்களில் ஈடுபடுவதை நிராகரிக்கும் உரிமை தொழிலாளர்களுக்கு இருக்க வேண்டும். ● நச்சுத் திரவியங்களுக்கு தொழிலாளர் பலியாவதை நிறுத்த வேண்டும். அவசியமான பாதுகாப்பு உபகரணங்களையும் ஆடை அணிகளையும் வழங்க வேண்டும். ● தொழிலுடன் சம்பந்தப்பட்ட விபத்துக்களாலும் நோய்களாலும் வேலை செய்ய முடியாத நிலையை அடைந்தவர்களுக்கு பூரண சம்பளம் வழங்க வேண்டும். ● இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தொழிலாளிக்குக் கிடைக்க வேண்டிய பூரண வருமானம் கிடைக்க வேண்டும். ● தொழிலாளர்களை பாதுகாப்பு இல்லாத தொழில்களில் அமர்த்தும் எஜமானர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். ● சகல வேலைத்தலங்களிலும் சுகாதார, வைத்திய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். ● விபத்துக்கிடமான தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள் முன்கூட்டியே ஓய்வு பெறவும் சம்பளத்தை குறைவின்றி பெறவும் வசதி செய்யப்பட வேண்டும். ● குறைந்த பட்சம் சகல தொழிலாளர்களுக்கும் ஒரு வருடத்துக்கு 6 கிழமை தொடர்ச்சியான லீவு வழங்கு!

## ஒருங்கு கூடும் உரிமையை வழங்கு

தொழிலாளர்கள் ஒருங்கு கூடும் உரிமையை நசுக்குவது ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு சுரண்டலுக்கு நல்ல வாய்ப்பான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க நடாத்தும் தாக்குதலின் ஒரு பாகமாகும். யூ.என்.பி. அரசாங்கம் வேலை நிறுத்தங்களையும் தொழிலாளர் போராட்டங்களையும் உடைக்கும் பொருட்டு அரச படை அணிகளையும், குண்டர் கும்பல்களையும், அவசரகாலச் சட்டங்களையும் கட்ட விழ்த்து விட்டு நீண்டகாலத் தாக்குதலில் ஈடுபட்டது. தொழிற்சங்க அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டதோடு ஒருங்கு கூடும் உரிமையும் பலாத்காரமான முறையில் பறிக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை இருப்பினும் அவற்றை ஒப்புக்கொள்ள எஜமானர்கள் கட்டுப்படவில்லை என தொழில் ஆணையாளர் தெரிவித்தார். இதன் மூலம் தொழிலாளர் ஒருங்கு கூடும் உரிமையை அழிக்கும் பொருட்டு அரச அங்கீகாரத்தினை வழங்கினார்.

1994 டிசம்பர் 20ல் யூ.என்.பி. அரசாங்கத்தினால் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகள், ஒருங்கு கூடும் உரிமைக்கு அரசாங்கம் தொடுத்த புதிய தாக்குதலாகும். ஒரு வர்க்கத்துக்கு எதிராக இன்னொரு வர்க்கத்தினை வழிநடாத்துவது - அதாவது வர்க்கப் போராட்டம்-இந்த அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது.

சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழிலாளர்களின் ஒருங்கு கூடும் உரிமை பலாத்காரமான முறையில் பறிக்கப்பட்டு, எஜமானர்களால் திணிக்கப்பட்ட ஊழியர் சபைகளுள் அவர்கள் சிறைப்படுத்தப் பட்டுள்ளனர்.

இந்நிலையில் தொழிற்சங்கங்கள், முதலாளித்துவ அரசுடனும் எஜமானர்களுடனும் சேர்ந்து அவர்களின் சிபார்சுகளை நடைமுறைக்கிடும் கோபரேட்வாத ஏஜன்சிகள் ஆகியுள்ளன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா.) அரசாங்கத்தின் பங்காளி. சீ.எம்.யூ. தலைவர்கள் சமீபத்தில் இடம்பெற்ற கொழும்பு துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் அரசாங்கத்தின் அவசியத்தின் படி அதைக் கலைத்தது. தொழிலாளர் சட்டங்கள் பற்றி உரிய விளக்கம் கொண்டுள்ள ஒரே அரசாங்கம் யூ.என்.பி.யே எனவும் குறிப்பிட்டது. இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் தலைமை, உலக வங்கியினதும் சர்வதேச நாணய சபையினதும் பெரும் புள்ளிகளுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளது. சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமாஜ தொழிற்சங்கங்களின் தொழிற்பாடு இதற்கு ஒன்றும் இரண்டாம் தரமானது அல்ல. டிசம்பர் 20ம் திகதிய அவசரகாலச் சட்டங்களுக்கு எதிராக இந்தத் தொழிற் சங்கங்கள் சின்னி விரலைத் தன்னும் உயர்த்தவில்லை. தொழிலாளர்களின் அமைப்புக்களை காட்டிக் கொடுக்கவும் ஒரணிகூடும் உரிமையைப் பறிக்கவும் இவற்றின் தலைவர்கள் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளனர்.

● தொழிலாளர்களின் ஒருங்குகூடும் உரிமையைக் காப்பாற்று! ● ஒடுக்குமுறைச் சட்டங்களை நீக்கு! ● தொழிற்சங்க அடக்குமுறையை நிறுத்து! ● துரோகத் தொழிற்சங்கத் தலைவர்களை வெளியேற்று! ● தொழிலாளர்களின் போராட்டத்தினை ஒழுங்கு செய்ய நடவடிக்கைக் குழுக்களை கட்டி எழுப்பு!

## தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை வழங்கு!

முதலாளி வர்க்க ஆட்சியின் கீழ் தொழிலாளர் வர்க்கத்துக்கு முதலாவது தாக்குதலைத் தொடுத்து 1948ன் சுதந்திரம் எனப்படுவதற்கு மூன்று மாதங்களின் பின்னர் யூ.என்.பி. அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையைப் பறித்தது.

அன்றில் இருந்து அவர்கள் இரண்டாம் தர பிரஜைகளாக சமூக அடக்கு முறைகளுக்கும், சுரண்டலுக்கும் உள்ளாகியுள்ளனர். இத்தொழிலாளர்களை நகர்ப்புறத் தொழிலாளர்களில் இருந்து இங்ஙனம் கூறுபோடுவது இலங்கை முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் அடிப்படை ஆயுதமாகியது. முதலாளித்துவ பாராளுமன்றத்துக்கு அடிபணித்து போன சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகள் வாக்குரிமையை இழந்த தோட்டத் தொழிலாளர்களைக் கைவிட்டுச் சென்றதோடு மட்டுமல்லாது, பின்னர் முதலாளித்துவக் கட்சிகளின் தோட்டத் தொழிலாளர் எதிர்ப்பு பிரச்சாரங்களிலும், அடக்குமுறைகளிலும் கூடச் சேர்ந்து கொண்டனர்.

1963 சிறிமா–சாஸ்திரி உடன்படிக்கை, தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பான்மையினரை நாட்டில் இருந்து வெளியேற்றும் உடன்படிக்கை ஆகியது. சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகள் அதற்கு முழுமனே ஆதரவளித்தன. 1972ல் தோட்டங்கள் அரசமயமாக்கப்பட்டதோடு தொழிலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத இயக்கத்தில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் சேர்ந்து கொண்டன. இதன் பெறுபேறாக ஒரு முதலாளியான தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பொறியில் தோட்டத் தொழிலாளர்கள் அகப்பட நேர்ந்தது.

இடைக்கிடையே தோட்டத் தொழிலாளர் போராட்டம் காரணமாக ஒரு பகுதி தொழிலாளர்களுக்கு முதலாளித்துவ அரசாங்கங்கள் குடியுரிமை வழங்க நேரிட்டது. எனினும் அவர்களை இரண்டாம் தர பிரஜைகளாக கணிக்கப்பட்டு, வேறுபாடு காட்டுவது தொடர்ந்தது. இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் அவர்களின் விருப்புக்கு மாறாக சிறிமா–சாஸ்திரி உடன்படிக்கையின் கீழ் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட இருந்தனர். இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட ஆயிரமாயிரம் எண்ணிக்கையிலான மக்கள் முகாம்களில் அனாதைகளாகவும் ஏழைகளாகவும் தள்ளப்பட்டனர்.

தோட்டத் தனியார்மயம் அரசாங்கத்தின் ஒரு திட்டமாகும். அதன் ஆரம்ப நடவடிக்கையாக சகல தொழிற்சங்கத் தலைவர்களின் அங்கீகாரத்துடன் தோட்ட நிர்வாகம் தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது.

அது தொழிலாளர்களின் தொழில், சம்பளம், சேவை நிலைமைகளை அழிக்கும் நடவடிக்கை ஆகியது. தோட்டத் தொழிலாளர்கள் உடனடியாகப் போராட்டத்துக்கு வந்தனர். தொண்டமான் தொழிலாளர்களை தற்காலிக சமரசத்தின் மூலம் திருப்பி அனுப்பினார். இம்முறைத் தேர்தலோடு தமது அதிகாரத்தினை உறுதி செய்யும் எந்தவொரு முதலாளித்துவ அரசாங்கமும் வெளிநாட்டு ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்கு தோட்டங்களை முழுமனே கையளித்துவிட்டு, தோட்டத் தொழிலாளர்களை மக்கட் படுகொலை முடிவுக்கு இட்டுச் செல்ல ஆயத்தமாய் உள்ளது. இ.தொ.கா.வும் மற்றும் சகல தொழிற் சங்கங்களும் உலகளாவிய ரீதியில் ரென்டர் கோரி தோட்டங்களை ட்ரான்ஸ்நஷனல்

கூட்டுத்தாபனங்களுக்கு கையளிக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தில் ஈடுபடுவதன் மூலம் முதலாளித்துவ அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்கின்றன.

இதற்கிடையே மலையக மக்கள் முன்னணி என்ற அமைப்பினை உருவாக்கிக் கொண்டு முன்தோன்றிய சந்திரசேகரன் சி.ல.சு.க. உள்ளடங்கலான முதலாளித்துவ கட்சிகளுடன் சேர்ந்து, தோட்டத் தொழிலாளர்கள் தனியான ஒரு தேசிய இனத்தினர் என்ற பிற்போக்கு நிலைப்பாட்டை வகிப்பதன் மூலம் ஏனைய துரோகிகள் தோட்ட, நகர்ப்புறத் தொழிலாளர்களின் ஐக்கியத்துக்கு எதிராக வாந்தியெடுத்த பிளவினை முன்னணிக்குக் கொண்டு செல்கின்றார். அவ்வாறே தோட்டத் தொழிலாளர்களை மலட்டுச் சத்தியாக்கிரக இயக்கங்களில் ஈடுபடுத்தி, பலவீனம் அடையவும் செய்கின்றார்.

தோட்டத் பகுதியில் கல்வியறிவின்மை பரந்து போயுள்ளது. புள்ளிவிபரங்களின் படி இது நூற்றுக்கு 50 வீதம் குறைவானது. இளைஞர்கள் வேலையின்மையில் மூழ்கியுள்ளனர். பாடசாலைகள் இல்லையென்றே கூறிவிடலாம். இருப்பவையும் மாட்டுக் கொட்டிலுக்குச் சமானம்.

● சகல தோட்டத் தொழிலாளர்களுக்கும் குடியுரிமை வழங்கு! சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தம் உட்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இயற்றப்பட்டுள்ள சகல சட்டங்களையும் இரத்துச் செய்! ● தோட்ட தனியார்மயமாக்கத்தை நிறுத்து! ● தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்கு! ● ரூபா. 5,000/- குறைந்தபட்ச மாதச் சம்பளம் வழங்கு! வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு ஏற்ப அதிகரிக்கும் சம்பளம்! ● வீடு, ஆஸ்பத்திரி சேவை, கல்வி வசதிகள் வழங்கு! ● கிராமப்புற சிங்கள ஏழைகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகத் தூண்டிவிடும் திட்டத்துடன் தோட்டத்துறையை துண்டித்து குடியேற்றங்கள் அமைப்பதை நிறுத்து!

## ஏழை விவசாயிகளின் உரிமையை காப்பாற்று

முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் கீழ் ஏழை விவசாயிகள் தலைமூழ்கிப் போயுள்ள நாசகார நிலைமையை கடந்த மகாபோகத்தில் வறுமையாலும் கடன்பளுவினாலும் பொலன்னறுவை மாவட்டத்தில் 15 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டமை நிதர்சனமாக்கியது. அரசாங்கம் இலங்கையில் விவசாய அபிவிருத்திக்கும் ஏழை விவசாயிகள் பிரச்சினைக்குத் தீர்வாகவும் தலையில் வைத்து கொண்டாடிய மகாவலித் திட்டத்தின் கீழ் இந்த அநியாயத்துக்கு விவசாயிகளைப் பலியிட்டமை அரசாங்கத்தினதும், முதலாளி வர்க்கத்தினதும் வங்குரோத்தையும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களது அலுகோசு ஏஜன்டு தன்மையையும் சந்திக்குக் கொணர்ந்துள்ளது. கடந்த ஆண்டில் தம்புல்லையில் தக்காளி, வெண்காயம் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட இரண்டு விவசாயிகள் இந்த விதத்திலேயே நஞ்சுருந்தி தற்கொலை செய்து கொண்டனர். மலைநாட்டு மரக்கறி விவசாயிகளும் கீழ்நாட்டு நெல், சிறுபயிர் உற்பத்தி விவசாயிகளும் இந்த அழிவுக்கே பலியாகினர்.

நிலமற்ற விவசாயிகள் எண்ணிக்கை இந்த விதத்திலேயே தொடர்ந்து அதிகரிக்கின்றது. குடியேற்றத் திட்டங்களில் விவசாயிகள் பயிர்ச் செய்கைச் செலவைத் தாங்க முடியாது நிலத்தை செல்வந்த விவசாயிகளிடம் ஈடு வைத்துவிட்டு, சேனைப் பயிர்ச் செய்கை விவசாயிகளாக மாறி உள்ளனர்.

உரம், இலகுவான கடன், உபகரணம், குறைந்த விலையில் உபகரணங்களும், யந்திரங்களும், உத்தரவாத விலை என்பன விவசாயிகள் பெற்றுக் கொண்ட உதவிமானிய முறையாகும். தமது வர்க்க ஆட்சியை நடாத்திச் செல்லும் பொருட்டு முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான சக்தியாக விவசாயிகளை பராமரிக்கவும், விவசாயிகளின் பதுட்டத்தினை அடக்கி வைத்திருக்கவும் முதலாளி வர்க்கம் இந்த உதவி மானியங்களை வழங்க நேரிட்டது. இப்போது இந்த சலுகைகள் அடியோடு நீக்கப்பட்டுள்ளன. விவசாயத்துக்கு அவசியமான சகல பொருட்களதும் விலை ஐந்து ஆறு மடங்கால் அதிகரித்துள்ளது. விவசாய உற்பத்தி வங்கிகளதும் கறுப்புக்கடைகாரர்களதும், தரகர்களதும் வட்டிக் காரர்களதும் கையில் அகப்பட்டுக் கொண்டுள்ளது. விவசாய உற்பத்திகள் குறைந்த விலைக்கு முதலாளிகளால் சூறையாடப்படும் அதே வேளையில், இவை நுகர்வோரினால் எட்டிப் பிடிக்கவும் முடியாத விலைக்கு விற்பனையாகின்றன. பயிர்ச் செய்கை அழிந்து போகின்ற தருணத்தில் இந்தப் பிசாசுகளுக்கு முகம் கொடுக்க முடியாத ஒரு நிலைமைக்குள் விவசாயிகள் தள்ளப்படுகின்றனர் - இந்நிலையிலேயே தற்கொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

மகாவலி மற்றும் திட்டங்களின் கீழ் விவசாயிகளின் மேல் தண்ணீர் வரி சுமத்தப்பட்டுள்ள தோடு மட்டுமன்றி, இவற்றின் நிர்வாகத்துக்கென நியமனம் செய்யப்பட்டுள்ள முகாமைத் தட்டுக்களுக்கும் விவசாயிகள் அகப்பட்டுள்ளனர். அரசாங்கம் பிரகடனம் செய்த விவசாய காப்புறுதி, ஓய்வுதியத் திட்டம் என்பன பொய் மோசடியாகும்.

அத்தோடு கிராமப்புறங்கள் இப்போது ஏகாதிபத்திய கூட்டுத்தாபனங்களுக்கும் தேசிய முதலாளிகளுக்கும் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் விநியோக பொதுப் பணியின் வரவுசெலவு இந்தக் கூட்டுத்தாபனங்களின் இலாபம் கறக்கும் வியாபாரத்துக்கு வழங்கும் ஒரு வரப்பிரசாதம். பெலவத்த, மொனராகலையில் ஆயிரமாயிரம் ஏக்கர்களை விவசாயிகளிடம் இருந்து பறித்தெடுத்து, சீனிக் கம்பனிக்கு வழங்கிய அரசாங்கம், பிபிலையில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களை அன்னாசி செய்கைக்கென வழங்கவுள்ளது. இலங்கை புகையிலை கம்பனி, நெஸ்லே கம்பனி முதலியவை கிராமப்புறங்களில் ஊடுருவிக் கொண்டுள்ளன. இந்த ஊடுருவலின் கீழ் விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்களாகவும் அரைத் தொழிலாளர்களாகவும் மாற்றப்பட்டு, அடிமைகளாக சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகள் பாவிக்கும் கிருமிநாசினிகள், இரசாயனத் திரவியங்கள் என்பன பன்னாட்டுக் கம்பனிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதோடு, விவசாயிகள் எதை பயிரிட வேண்டும் என்பதைக் கட்டளையிடுவதும் இக்கம்பனிகளின் அதிகாரத்துக்கு உட்பட்டதாய் உள்ளது. புதிய கட் (GATT) உடன்படிக்கையின் கீழ் எதிர்காலத்தில் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளால் கண்டுபிடிக்கப்பட்டதெனக் கூறப்படும் கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் விவசாயிகள் வரி செலுத்த நேரிடும்.

விவசாயிகளை இந்தப் பேரழிவுக்குள் தள்ளுவதற்கான முக்கிய துரும்பாக யூ.என்.பி.யும் சி.ல.சு.க.வும் தமிழர் விரோத இனவாதத்தினைத் தூண்டி விடுவதை பயன்படுத்தின. தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் பெரும்பான்மையினராக

வாழும் பகுதிகளிலும் எல்லைகளிலும் விவசாயக் குடியேற்றங்கள் எனப்படுவதை அமைப்பதன் மூலம் சிங்கள விவசாயிகளை தமிழ் ஏழைகளுடன் இடைவிடாத இரத்தக் களரிகளுக்கு இட்டுச் சென்றதோடு, நாடு முழுவதும் விவசாயிகளை இனவாத ரீதியில் தூண்டிவிடவும் முதலாளி வர்க்கம் அதைப் பயன்படுத்தியது. குடியேற்றத் திட்ட பதட்ட நிலை உக்கிரம் அடையும் போது, முதலாளித்துவ அரசாங்கம், திட்டவட்டமான முறையில் அரச காடைத்தனங்களைக் கட்டவிழ்த்து விட்டு கிராமப்புற இளைஞர்களைப் படுகொலை செய்யும் பயங்கரங்கள் மூலம் அவற்றை நசுக்கியது. 1971 ஜே.வீ.பி.யின் காடைத்தன கிளர்ச்சியையும் 1988-90 பாசிசப் பயங்கரங்களையும் முதலாளி வர்க்கம் இவற்றுக்குப் பயன்படுத்தியது.

இப்போது விவசாயிகளிடையே பதட்ட நிலை வளர்ச்சி கண்டு வருகின்றது. அரச சார்பற்ற அமைப்புக்கள் (NGO) என்ற கோதாவில் வெளிநாட்டு, உள்நாட்டு பிற்போக்கு அமைப்புக்களும், ‘ஜனதா மித்துரோ’, ஜே.வீ.பி. போன்ற குட்டி முதலாளித்துவ பிற்போக்கு அமைப்புக்களும், கத்தோலிக்க திருச்சபையும் ஏழை விவசாயிகளை முதலாளித்துவ ஆட்சிக்கு கீழ்ப்படுத்தி, ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிடும் பொருட்டு விவசாயிகளை முற்றுகையிட்டு வைக்க முயற்சிக்கின்றன. ஆளும் வர்க்கத்தின் பல்வேறு தட்டினரையும் போலவே குட்டி முதலாளித்துவ ஜே.வீ.பி. உட்பட்ட அமைப்புக்களும் மீண்டும் ஏழை விவசாயி இளைஞர்களை பாசிச இயக்கத்தின் குடைக்கீழ் கொணர்ந்து, ஏகாதிபத்தியவாதிகளின் அலுகோசு கோடாகிய தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக ஈடுபடுத்த முயற்சிக்கும். நவசமசமாஜக் கட்சியினர் இத்தகைய ஒரு இயக்கத்தினைக் கட்டியெழுப்புவதில் பங்கு கொள்ளத் தாம் தயார் என்பதை ஏற்கனவே தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் எதிரில் பெரும் ஆபத்து வளர்ச்சி கண்டு வருகின்றது. விவசாயப் பிரச்சினையை முதலாளித்துவ அமைப்பினுள் தீர்த்துவிட முடியாது. அவர்களைப் பேரழிவில் இருந்து விடுதலை செய்வது என்பது சோசலிசப் புரட்சியின் மூலம் தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர்வதன் மூலம் மட்டுமே இடம்பெறும். ● சகல நிலங்களையும் தேசியமயமாக்கி ஏழை விவசாயி பயிரிடும் நிலத்தின் உரிமையை அவனுக்கு உத்தரவாதம் செய்ய வேண்டும். ● விகாரை, தேவாலகம், நிந்தகம் என இன்னமும் எஞ்சியுள்ள நிலமானித்துவ மிச்ச சொச்சங்களை துடைத்துக்கட்டி, அவற்றில் தொழிற்படும் ஏழை விவசாயிகளின் உரிமையை ஊர்ஜிதம் செய்! ● செலுத்த முடியாமல் குவிந்து போயுள்ள சகல விவசாய கடன்களையும் - வங்கிகள், நெருப்பு வட்டிக்காரர்கள் - துடைத்துக் கட்டு! ● விவசாயிகள் பயிர்ச் செய்கை கடன்பெறுவதை ஊர்ஜிதம் செய்! ● உதவி மானியத்தை மீண்டும் உறுதி செய்! ● உதவிமானியம் மீண்டும் வழங்கு ● உத்தரவாத விலையை உறுதிசெய்! ● வங்கிகள், விவசாய இரசாயன திரவிய, உபகரண, இயந்திர கம்பனிகளில் தரகர்கள் சூறையாடுவதை நிறுத்து! ● விவசாய தொழிலாளர்கள் ஒருங்குகூடும் உரிமை, மாதாந்த சம்பள திட்டத்தை ஊர்ஜிதம் செய்தல் ● தொழிலாளர்களினதும் ஏழைகளதும் கமிட்டி மூலம் உத்தரவாத விலையை தீர்மானித்தல், அதிகாரத்துவ

பிடியை தகர்த்து விவசாயிகளின் தேவைகளை அவசியமான முறையில் தயார் செய்தல், தண்ணீர் முதலான விவசாய அவசிய வசதிகளை வழங்க வேண்டும்.

## இளைஞர்களின் உரிமைகளை உறுதி செய்

இளைஞர்கள் முதலாளி வர்க்க ஆட்சியின் பெரும் தாக்குதல்களுக்கு உள்ளான ஒரு பிரிவினர் ஆவர். நெருக்கடிக்கு உள்ளான முதலாளித்துவ முறையின் கீழ் உயர் கல்வி கற்கும் உரிமை, தொழில் செய்யும் உரிமை, கலாச்சார உரிமைகள் இளைஞர்களிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளது. இல்லையேல் என்றுமே வழங்கப்படவில்லை. ஜே.வீ.பி.யின் காடைத்தனம் நிறைந்த கிளர்ச்சியைப் பாவித்து, பதட்டம் அடைந்த இளைஞர்களை நசுக்கும் பொருட்டு கூட்டரசாங்கம் 15,000 இளைஞர்களை கொலை செய்தது. யூ.என்.பி. அரசாங்கம் 1988–90ல் சுமார் ஒரு இலட்சம் இளைஞர்களை கொலை செய்ததோடு இளைஞர்களை நிரந்தர அரச அடக்குமுறைக்கும் உள்ளாக்கியது. முதலாளி வர்க்கம் இப்போது இளைஞர்களை அற்ப சம்பளத்துக்கு ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு விற்றுத் தள்ளக் கூடிய ஒரு கூட்டமாகவே கணிக்கிறது.

இளைஞர்களின் சகல உரிமைகளையும் வழங்கு: ● இளைஞர்களுக்கு இலவச தொழில் பயிற்சி தரும் நிறுவனங்களை அமை! பயிற்சிக் காலத்துக்கு வாழ்க்கைப்படி கொடு! ● இளைஞர்கள் பாடசாலைகளைவிட்டு வெளியேறியதும் வளர்ந்தோருக்குப் போலவே போதுமான வேலையின்மை வாழ்க்கைப்படி கொடு! இளைஞர்களும், இளம் தொழிலாளர்களும் ஒருங்குசேரும் உரிமையை வழங்கு! இளைஞர்களை இரவு வேலைகளிலும் உடல் நலத்துக்கு பாதகமான வேலைகளிலும் ஈடுபடுத்துவதை தடைசெய்! ● 20 வயதுக்கு குறைவான இளைஞர்களின் மணித்தியால வேலை நேரத்தை குறைப்பதோடு அவர்கள் விளையாட்டிலும் மற்றும் உடல்நல அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபடும் வசதிகள் வழங்கப்பட வேண்டும்

# இனவாத யுத்தத்தை நிறுத்து! தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளை உறுதிசெய்!

சுதந்திர அரசு எனப்படுவது அமைக்கப் பட்டதில் இருந்து முதலாளி வர்க்கம் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக இனவாத வேறுபாடுகளையும் ஆத்திரமூட்டல்களையும் அபிவிருத்தி செய்தது. அது முதலாளி வர்க்க ஆட்சியை நடாத்தச் செய்யும் நச்சுத்தனமான ஆயுதமாகியது.

கடந்த 17 ஆண்டுகளுள் முழுத் தீவினதும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளுக்கு கொடிய தாக்குதல் தொடுக்கப்பட்டது, முதலில் தமிழ் ஒடுக்கப்படுவோருக்கு எதிரான இனவாத யுத்தத்திலும் ஆத்திரமூட்டவிலும் ஈடுபட்டவாறே. தீவின் முக்கிய பிரச்சினை இனவாத யுத்தத்தினை முடிவுக்குக்

கொணர்வதாகியுள்ளது. முதலாளித்துவ யூ.என்.பி., சி.ல.சு.க., முன்னணி அமைத்துக் கொண்ட சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சிகளும், குட்டி முதலாளித்துவ ஜே.வீ.பி. போன்ற அமைப்புக்களும் இன்று மீண்டும் வாக்குகளைக் கொள்ளையடித்து ஆட்சிக்கு வரும் பொருட்டு "அரசியல் தீர்வு" என்ற பொய்யை உச்சாடனம் செய்கின்றன. அத்தோடு கொழும்பை; தகர்க்கும் திட்டம் பற்றிய இனவாத ஆத்திரமூட்டல் பிரச்சாரங்கலைளயும் மேற்கொண்டுள்ளனர். இதனால் ஒவ்வொரு தடவையும் நூற்றுக் கணக்கான தமிழ் மக்கல் சிறையில் தள்ளப்படுகின்றனர்.

சிங்கள முதலாளி வர்க்கத்தின் எந்தவொரு பிரிவினருக்கும் சரி, அதன் எடுபிடி குட்டி முதலாளித்துவ அமைப்புக்களுக்கும் சரி "அரசியல் தீர்வு" கிடையாது. அரசியல் தீர்வு வழங்கவும் முடியாது. இது தமிழ் தேசிய இனத்தினதும் சிங்கள தேசிய இனத்தின் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களினதும் இரத்தத்தினால் எழுதப்பட்டுள்ளது. தமிழ் ஒடுக்கப்படும் மக்களிடையே இனவாத ஒடுக்குமுறைக்கு எதிரான கிளர்ச்சி வளர்ச்சி கண்டதுதான் தாமதம் அவர்களுக்கு எதிராக இலங்கை முதலாளி வர்க்கம் யுத்தத்தினை ஆரம்பித்து 11 வருடங்கள் ஆகிறது. அதில் இருந்து தலையெடுக்க முடியாத விதத்தில் இராணுவ-அரசியல் நெருக்கடி வளர்ச்சிகண்டு, தென்மாகாணங்களில் சிங்களம் பேசும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களிடையே பதட்டம் வளர்ச்சி கண்டது. இந்த முதலாளி வர்க்கம் ஏகாதிபத்திய வாதிகளின் ஆசிர்வாதங்களுடன் இந்திய-இலங்கை உடன்படிக்கையைத் திணித்து, இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை கொணர்ந்தனர். அதன் மூலம் தென் மாகாணங்களில் மக்களுக்கு எதிராக பொலிசையும் இராணுவத்தையும் கட்டவிழ்த்து விட்டனர். இந்திய இராணுவம் நெருக்கடிக்கு முகம் கொடுத்த வேளையிலும் தென் மாகாணங்களில் கிராமப்புற பதட்ட நிலை வளர்ச்சி கண்ட வேளையிலும் பிரேமதாச அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமரசம் செய்து கொண்டு, இராணுவத்தையும், பொலிசையும் குண்டர் கும்பல்களையும் கிராமப்புற இளைஞர்களைக் கொன்றுதள்ள விடுவித்தது. அதன் மூலம் "சிங்கள தேசிய இனத்தை" காக்கும் யுத்தம், முதலாளி வர்க்க ஆட்சியைக் காக்கும் காட்டுமிராண்டி இனவாத உபாயமாகும் என்பதை முதலாளி வர்க்கம் ஊர்ஜிதம் செய்தது. இச்சமயத்தில் சி.ல.சு.க.வும் அதனுடன் இணைந்திருந்த சந்தர்ப்பவாதிகளதும் பிரச்சாரம், பிரேமதாச அரசாங்கம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான யுத்தத்தினை நடாத்துவதைகைவிட்டுவிட்டது என்பதாக விளங்கியது. 1990ல் பிரேமதாச யுத்தத்தை மீண்டும் ஆரம்பித்த வேளையில் அரசாங்கத்தின் உதவியாளரான இ.தொ.கா. மட்டுமன்றி சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ கட்சிகளும் அதற்கு முழுமனே ஆதரவு அளித்தன. தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் கடந்த 4 ஆண்டுகளாக வாழ்வது, கொடூரமான முற்றுகைக்குள்ளேயாகும். அகதிகளின் எண்ணிக்கை 15 லட்சம். அநேக இளைஞர்களும் முதியோரும் நாட்டைவிட்டு வெளியேறி உள்ளனர். தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு தென் மாகாணங்களில் பூரண சுதந்திரம் இருப்பதாக விஜேதுங்க வாயடிக்கும் அதே வேளையில் அவர்கள் அப்பகுதியில் நிரந்தர பயங்கரத்துக்கு முகம் கொடுத்த வண்ணமே. சீவியத்தை ஓட்டுகின்றனர்.

வடக்கு-கிழக்கு தமிழ் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் சிங்கள

முதலாளிகள் இனவாதத்தினைத் தூண்டி விடுகையிலும், இதற்குப் போட்டியாக தமிழ் முதலாளிகள் இனவாதக் குரல் எழுப்புகையிலும் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஒன்றிணைந்து நின்றனர். அது இலங்கைத் தொழிலாளர்கள் தமிழர் விரோத இனவாதத்துக்கு எதிரான அரசியல் சக்தியாக கிளர்ந்து எழும் நிலைமையிலாகும்.

1964ல் லங்கா சமசமாஜ கட்சி இனவாதத்தினை தோளில் சுமந்து கொண்ட சி.ல.சு.க.வுடன் சேர்ந்து, தொழிலாளர் வர்க்கத்தின் வர்க்க சுயாதீனத்தை காட்டிக் கொடுத்ததன் மூலம் இந்த அனைத்துலகவாதப் பிணைப்புக்கு கழுத்தாங்குத்தியில் அடி விழுந்தது. இந்த நிலைமையிலேயே தமிழ் முதலாளிகளும், குட்டி முதலாளித்துவ அமைப்புக்களும் முன்னணிக்குப் பாய்ந்து கொண்டன. இந்த தமிழ் முதலாளித்துவ அமைப்புக்கள் இப்போது தமது சுய கோலத்தைக் காட்டிக் கொண்டுள்ளன. டெலோ, புளோட், ஈரோஸ், ஈ.பீ.டீ.பி., ஈ.பீ.ஆர்.எல்.எப். இனவாத யுத்தத்தின் ஆயுதமாகியுள்ளன. தமிழ் முதலாளி வர்க்கத்தின் முக்கிய கட்சியாகியுள்ள தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஐ.நா.வினதும், பொதுநலவாய அரச அமைப்புக்கள், ஏகாதிபத்தியவாத நாடுகளதும் அப்பட்டமான இராணுவத் தலைமீட்டுக்குச் சார்பாக உள்ளது. ஏகாதிபத்தியவாதிகள் உலகம் பூராவும் உள்ள பழைய காலனித்துவ நாடுகளினுள் ஊடுருவும் பொருட்டு தேசியவாத, இனவாத மோதுதல்களை பயன்படுத்திக் கொள்வதைப் போலவே, அந்த மோதுதல்களைக் கிளறியும் விடுகின்றனர். விடுதலைப் புலிகள் போன்ற தேசியவாத அமைப்புக்களின் கையிலான தேசிய சுயநிர்ணயம் பற்றிய சுலோகம் இன்று ஏகாதிபத்திய ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கான சுதந்திர வர்த்தக வலயம் நிர்மாணித்துக் கொடுக்கும் பிராந்தியம் உருவாக்குகின்றதும் அவற்றின் பொலிஸ் காரர்களாக தம்மை நியமனம் செய்து கொள்கின்றதுமான சுலோகமாகியுள்ளது. விடுதலைப் புலிகளின் விதிமுறை பீ.எல்.ஓ. ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் உட்பட்ட தேசியவாத அமைப்புக்களின் பாதையேயாகும். விடுதலைப் புலிகள் இந்த ஏகாதிபத்திய சார்புச் சேவைக்காக நேரடியாக ஏகாதிபத்திய வாதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதோடு, சிங்கள முதலாளி வர்க்கத்தின் ஊடான சமரசத்துக்குத் தயார் எனவும் தெரிவித்துள்ளது. மறுபுறத்தில் விடுதலைப் புலிகள், சிங்கள, முஸ்லீம் முதலாளிகளுடன் இனவாதத்தைக் கிளறுவதில் போட்டியில் ஈடுபட்டுள்ளது.

தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் விடுதலைப் புலிகளோ அல்லது வேறு தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களோ தமது ஜனநாயக உரிமைகளைக் காக்க இலாயக்கற்றதும் தயாரற்றதும் அத்தோடு எதிரானதும் என்பதை இப்போது அனுபவ ரீதியாகக் கண்டுகொண்டுள்ளனர். விடுதலைப் புலிகள் வட மாகாணத்தில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை நசுக்கும் ஒடுக்குமுறை ஆட்சியில் ஈடுபட்டுள்ளது.

இனவாத யுத்தத்துக்காக ஆண்டொன்றுக்கு மொத்த தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 6 வீதம் பணம் செலவிடப் படுகின்றது. இவ்வாண்டில் இப்போது செலவிடப்பட்டுள்ள பணம் ரூபா. 3000 கோடி. ஆண்டு இறுதியில் இது இன்னும் அதிகரிக்கும். தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் மேல் யுத்தச் செலவுகள் வரி அதிகரிப்பு, மானியம் வெட்டு, விலைவாசி அதிகரிப்பு என்ற

விதத்தில் திணிக்கப்படுகின்றது. மறுபுறத்தில் யுத்தத்தை அரசாங்கம், முதலாளிகள், படைகளின் பெரும் புள்ளிகள் கமிஷன் மற்றும் ஊழல் நடவடிக்கைகள் மூலம் ஏகாதிபத்திய யுத்த ஆயுத விற்பனையாளர்களுடன் செய்து கொள்ளும் ஒரு வியாபாரமாக்கி உள்ளனர். முதலாளி வர்க்கம் வேலையற்ற இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்து, ஆயிரக் கணக்கில் பலியிடுகின்றது.

இந்தியாவின் முதலாளி வர்க்கம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்குவதை இந்தியாவினுள்ளும் அரச ஒடுக்குமுறையை அபிவிருத்தி செய்வதற்கான ஆயுதமாக்கிக் கொண்டுள்ளது.

இவை அனைத்தும் முதலாளி வர்க்க பிற்போக்குச் சக்திகள். இவர்களால் ஜனநாயக உரிமைகளை ஒடுக்கப்படும் மக்களுக்கு வழங்கி, ஐக்கியப்படுத்தும் முற்போக்குப் பணியைப் பற்றி எண்ணிப் பார்க்கவும் முடியாது. அவர்கள் ஏகாதிபத்தியவாதிகளின் நேரடி ஏஜன்டுகளாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக தொழிலாளர் வர்க்கத்துக்கு அஞ்சுவதே இதற்குக் காரணம்.

இலங்கை-தமிழ்ஈழம் பகுதிகளின் தொழிலாளர் வர்க்கம் ஒன்றிணைந்து இந்தியத் துணைக் கண்டத்தின் தொழிலாளர்களுடன் இணைந்து ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்துக்கு எதிராக கிளர்ந்து எழுவதன் மூலமே யுத்தத்தினை நிறுத்தவும், தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளை உறுதி செய்யவும் முடியும். அதற்கான வேலைத்திட்ட அடிப்படை இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக இலங்கை-தமிழ்ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை கட்டி எழுப்புவதேயாகும். ஆதலால் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பின்வருமாறு கூறுகின்றது:

● இனவாத யுத்தத்தினை நிறுத்து! இது எமது யுத்தம் அல்ல. யுத்தத்துக்கு ஒரு சதமோ ஒரு ஆளோ, ஒரு கருவியோ கொடாதே! ● வடக்கு-கிழக்கில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்று! இந்திய-இலங்கை உடன்படிக்கையை இரத்துச் செய்! ஏகாதிபத்திய யுத்தத் தலைமீடுகளுக்கு இடமளியாதே! ● வடக்கு-கிழக்கு, இலங்கைத் தொழிலாளர்களின் ஐக்கியத்தைக் கட்டியெழுப்பு! இலங்கை-தமிழ் ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தைக் கட்டியெழுப்பு!

## கிராமப்புற படுகொலைகளை நிறுத்து

தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்துடன் இணைந்த ஒரு யுத்தத்தினையே யூ.என்.பி. அரசாங்கம் 1988-90ல் கிராமப்புற ஏழைகளுக்கு எதிராகக் கட்டவிழ்த்தது. இதன் மூலம் கிராமப்புற மக்களின் பிரச்சினையை தீர்ப்பதில் முதலாளி வர்க்கம் முழுமனே தோல்வி கண்டுள்ளது என்பது இரத்தத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த யுத்தத்தின் மூலம் ஒரு இலட்சம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டதோடு 30,000 பேர் சித்திரவதைக் கூடங்களில் தள்ளப் பட்டனர். 10,000 பேர் இன்னமும் இந்த சித்திரவதைகளுக்கு உள்ளாகிக் கொண்டுள்ளனர். இடைக்கிடையே நடாத்தும் ஆத்திரமூட்டல்கள் மூலம் இந்த இளைஞர்களை கொன்று தள்ளும் காட்டுமிராண்டி இயக்கத்தை அரசாங்கம் நடாத்துகின்றது. இந்தப் பயங்கரத்துக்கு யூ.என்.பி.க்கு முதலாளித்துவ சி.ல.சு.க.வும் சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சிகளும் ஆதரவு

வழங்கின. இன்று இவர்கள் இறந்தவர்களின் பேரில் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். இது கிராமப்புற இளைஞர்கள் உட்பட்ட ஏழைகளை நசுக்கும் பொருட்டு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற இடம்பெறும் இயக்கத்தின் ஒரு பாகமாகும்.

கிராமப்புற ஏழைகளையும் இளைஞர்களையும் பாதுகாக்க தொழிலாளர் தலைமையை கைப்பற்ற வேண்டும்.

● சிங்கள-தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்! ● கிராமப்புற படுகொலை இயக்கத்தை ஆராய தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்களைக் கொண்ட சுயாதீன விசாரணைக் கமிட்டியை நிறுவு! ● பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டத்தை நீக்கு! வேலைத்தலங்களிலும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் வதிவிடங்களிலும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைக் கொண்ட பாதுகாப்பு படையணிகளை நிறுவு!

## ஒடுக்குமுறைச் சட்டங்களை அகற்று!

1970-77 முதலாளித்துவ கூட்டரசாங்கம் 6 வருடகால அவசரகாலச் சட்ட ஆட்சியை நடாத்தியது. யூ.என்.பி. அரசாங்கம் 17 வருடகால ஆட்சி காலத்தில் 16 வருடம் அவசரகால சட்ட ஆட்சி நடாத்திய. இலங்கையினுள் முதலாளி வர்க்க ஆட்சி இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அரை-இராணுவப் பொலிஸ் ஆட்சியாகவே கழிந்துள்ளது. கடந்த 16 ஆண்டுகளில் இந்த சட்டங்களுக்கு மேலும் மிலேச்ச சட்டங்கள் சேர்க்கப்பட்டன. வட-கிழக்கு மாகாண யுத்தம் தொடுக்கப்பட்டதும், கிராமப்புற இளைஞர்கள் ஒரு இலட்சம் பேர் படுகொலை செய்யப்பட்டதும் இந்த சர்வாதிகார ஆட்சியின் கீழேயே. தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் இந்த மிலேச்ச அடக்குமுறைச் சட்டங்களை நீக்குவதற்கு போராட வேண்டும்.

● அவசர காலச் சட்டங்களை நீக்கு! ● பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கு! ● மரண தண்டனையை அகற்று!

## வீட்டுப்பெண்களதும் மகளிரதும் உரிமைகளைப் பேணு

முதலாளி வர்க்க ஆட்சியின் கீழ் மகளிர் ஒடுக்குமுறைக்கும் அடக்கு முறைக்கும் உள்ளாகின்றனர். ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் சுரண்டலுக்கு பெருவாரியான பெண்களை பின்தங்கிய நாடுகளில் இருந்தே தெரிவு செய்கின்றன. இந்நாடுகளின் மரபுவழி நிலைமைகளினால் தாம் சுரண்டலை உக்கிரமான முறையில் நடாத்தலாம் என்ற நம்பிக்கையிலேயே அங்ஙனம் செய்கின்றன. சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களில் நூற்றுக்கு 90 வீதமானோர் பெண் தொழிலாளர்கள். அநேகமாகப் பெண் தொழிலாளர்கள் ஆண் தொழிலாளர்களைக் காட்டிலும் கூடுதலான சம்பள முரண்பாடுகளுக்கும் குறைந்த சேவை நிலைமைகளுக்கும் பலியாகிறார்கள்.

மறுபுறத்தில் முதலாளித்துவ சமூக அமைப்பினுள் பழைய பின்தங்கிய நிலைமையை முன்னெடுப்பதன் மூலம் மகளிரை இரண்டாம் தர-ஆண்களுக்குச் சமமான உரிமைகள் அற்றவர்களாக கணிக்கப்படுகின்றது. அவர்கள் மேல்

குடும்ப ஜீவியத்தின் சகல சுமைகளும் சுமத்தப்படுகின்றது. மகளிர் மேல் திணிக்கப்படும் இந்த ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தைத் தொழிலாளர் வர்க்கம் கையேற்க வேண்டும். சமூகத்தில் மிகவும் ஒடுக்குமுறைக்கு ஆட்படும் மகளிரின் விடுதலையை அடையப் போராடாமல் தொழிலாளர் வர்க்கம் விடுதலையை அடைய முடியாது.

● பெண் தொழிலாளர் மீது சுமத்தப்படும் சம்பள முரண்பாடுகளை நீக்கி, ஆண் தொழிலாளரின் சம்பளத்தை செலுத்து! ● பெண்களை இரவு வேலைகளில் அமர்த்துவதை நிறுத்து! ● வேலை செய்யும் பெண்களின் பிள்ளைகளை பார்த்துக் கொள்ள அரசாங்கச் செலவில் சிறுவர் மனைகளை அமை! ● வேலை செய்யும் பாலூட்டும் தாய்மாருக்கு வேலை நேரத்தில் சம்பளத்துடன் கூடிய 3 மணித்தியால ஓய்வு வழங்கு! ● பிள்ளைகளை பாடசாலைக்கு கொண்டு செல்ல அரசாங்க செலவில் வசதிகள் செய்து கொடு! ● வைத்திய அறிக்கையின் மீது அவசியமான முழு காலத்துக்கும் சம்பளத்துடன் கூடிய மகப்பேற்று விடுமுறை வழங்கு! ● சகல கிராமங்களிலும் சகல வசதிகளுடனும் கூடிய பிரசவ விடுதிகள் அமை! ● வீட்டுப் பெண்களுக்கு ஓய்வு வசதிகள் செய்து கொடு! ● மகளிரின் வேண்டுகோளின் பேரில் கருச்சிதைவு உரிமை வழங்கு!

## கலாச்சாரம், கலை, விஞ்ஞானத்தை காப்பாற்று

இலங்கையின் முதலாளி வர்க்கமும் அரசாங்கமும் ஏனைய சகல நாடுகளைப் போல் கலாச்சார நடவடிக்கைகள், கலை, விஞ்ஞானத்தின் அபிவிருத்திக்காக பணம் செலவிடுவதை பாரதூரமான விதத்தில் வெட்டுகின்றது. உண்மையில் இன்று நடப்பது கலை, கலாச்சார நடவடிக்கைகளை ஆளும் வர்க்கத்தினதும் அரசாங்கத்தினதும் ஆட்சியை நியாயப்படுத்தும் ஆயுதமாக மாற்றுவதே.

கலைஞர்களையும் புத்திஜீவிகளையும் விலைக்கு வாங்குவதும் தமது பந்தம்பிடிகாரர்கள் என்ற கேவலமான நிலைக்கு இறக்குவதும் இடம் பெறுகின்றது. விஞ்ஞான ஆராய்ச்சிகள், அபிவிருத்திகள் பற்றி முதலாளி வர்க்கம் நினைத்தும் பார்ப்பதில்லை.

தமது ஆட்சிக்கு புறத்தே இடம் பெறும் கலையாயின் அதனை ஒடுக்கி விட அரசாங்கமும், முதலாளி வர்க்கமும், தொடர்புச் சாதனங்களும் முயற்சிக்கின்றன. தோட்டத் தொழிலாளர்களின் துயரங்கள் பற்றிப் பேசிய ஒரு நாடகத்தை இறுதித் தேர்வில் காட்டப்படுவதற்குக் கூட இடமளிக்காது ஒடுக்குவதற்கு அரசாங்கமும், இ.தொ.கா. தலைவர்களும் முன்நின்றனர். கலைப் படைப்புக்கள் தணிக்கைக்கும் குரோதத்துக்கும் ஆளாவதோடு, விஞ்ஞான பூர்வமற்ற பின்தங்கிய படைப்புக்கள் முதலாளி வர்க்கத்தினால் தூக்கிப் பிடிக்கப்படுகின்றன.

ஆளும் வர்க்கத்தின் இந்த பிற்போக்கு கண்ணோட்டங்களுக்குத் துணை போகக் கூடிய "ஜாதிக சிந்தனை" போன்ற படுபிற்போக்கு கோட்பாடுகளை முன்வைப்பவர்கள் தூக்கிப் பிடிக்கப்படுகின்றனர். இவை தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை சிந்தனா ரீதியில் நசுக்கும் நடவடிக்கையாகும். கலைக்கும் கலாச்சார நடவடிக்கைகளுக்கும், விஞ்ஞானத்துக்கும் தொடுக்கப்படும்

தாக்குதல் தொழிலாளர் வர்க்கத்துக்குத் தொடுக்கப்படும் தாக்குதலின் ஒரு பாகமாகும்.

● கலாச்சார, கலை நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சகல தடைகளையும் நீக்கு! தணிக்கைச் சபையை நீக்கு! ● கலாச்சாரம், கலை, விஞ்ஞானம், விளையாட்டு பற்றிய அவசியங்களுக்காக அவற்றில் நிபுணத்துவம் படைத்தவர்களுக்கு சகல வசதிகளும், உதவியும் வழங்கு! ● கலாச்சார நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் பொருட்டு தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு அரச செலவில் வசதிகள் வழங்கு! ● கலைஞர்களினதும், விஞ்ஞானிகளதும் மற்றும் கலாச்சார நட வடிக்கைகளின் நிபுணர்களதும் கமிட்டி மூலம் கலை, விஞ்ஞான, விளையாட்டு நடவடிக்கை களுக்கு அவசிய விலை, நிதியை நிர்ணயம் செய்ய இடமளி! சகல பெரும் வெளியீட்டு கம்பனிகள், சினிமா கம்பனிகளை தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கு! ● கலைஞர்களதும், எழுத்தாளர்களதும் பூரண சுதந்திரத்தைக் காக்கும் விதத்தில் அவர்களுக்கு வெளியீட்டு வசதிகள் வழங்கு! ● வானொலி சேவை, ரூபவாஹினி சேவைகளை தொழிலாளர்களதும், கலை, விஞ்ஞான நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களதும் பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்து!

## கணக்கேடுகளை சோதனை செய்!

தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் தொழில், வாழ்க்கை நிலைமைகள், சேவை நிலைமைகள், உதவி மானியம், நலன்புரி வேலைத்திட்டம், கலை, விஞ்ஞான நடவடிக்கை, இளைஞர்களின் உரிமைகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு இன்றியமையாத நடவடிக்கை எடுப்பது தம்மால் ஒரு போதும் சகித்துக் கொள்ள முடியாததும், பெரும் செலவுக்கிடமானதுமான நடவடிக்கை என முதலாளி வர்க்கமும் அதன் கட்சிகளும் ஒரேயடியாக கூறலாம். அவற்றுக்கு நிதி கிடையாது எனவும் அவர்கள் கூறலாம். மறுபுறத்தில் ஏகாதிபத்தியவாத ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத் தாபனங்களும், தேசிய பெரும் முதலாளித்துவ நிறுவனங்களும் நடாத்திவரும் கொள்ளைகளை மூடிமறைக்கும் பொருட்டு அவர்களின் கணக்கு வழக்கு ஏடுகளை அந்தரங்கமாக வைத்துக்கொள்ள இடமளிப்பார்கள்.

இலங்கைத் தேயிலைச் சந்தையில் விலைகளை மாற்றும் பொருட்டு இடம்பெறும் ஊழல்கள் அப்பட்டமான இரகசியமாகும். கமிசன் அடித்தல், வங்கிகளில் இருந்து பெரும் கடன் வாங்கித் திருப்பிச் செலுத்தாமல் தப்புவது என்பன முதலாளித்துவ நிறுவனங்களின் இலட்சணமாக உள்ளது. ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத் தாபனங்கள் பிரமாண்டமான இலாபப் பொதியை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்கின்றன. இந்நாட்டு முதலாளித்துவ கம்பனிகளின் இலாப பொதி கட்டும் வேலை வளர்ச்சி கண்டு வருகின்றது. இவை பிரபல்யமானவை. ஏனைய கொள்ளையடிப்பு நடவடிக்கைகள் வர்த்தக கணக்கு ஏடுகளில் இரகசியமாக இருந்து கொண்டுள்ளன.

வர்த்தக இரகசியங்களைப் பேணுவதை ஒழித்துக் கட்டும்படியும் முதலாளித்துவச் சுரண்டல்காரர்களின் கணக்கு ஏடுகளை பரீட்சிக்க திறந்துவிடும்படியும் பு.க.க. வேண்டுகின்றது.

● தொழிலாளர்கள், வீட்டுப்பெண்கள், சிறிய விவசாயிகள் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கமிட்டிகளை அமைத்து, வெளிநாட்டுக் கூட்டுத்தானங்கள், பெரும் கம்பனிகள், நிறுவனங்கள் முதலானவற்றின் வர்த்தக இரகசியக் கணக்கு வழக்குகளை பரீட்சிக்க சந்தர்ப்பம் வழுங்கு! ● தனிப்பட்ட முதலாளித்துவ சுரண்டல்காரர்கள் சகலரும் தேசிய வருமானத்தில் எவ்வளவு தொகையை ஏப்பம் விடுகின்றார்கள் என்பது பற்றிய ஒரு ஐந்தொகையை தயாரித்து அம்பலமாக்கு! தினமும் இடம்பெறும் ஊழல்கள், கமிசன் அடிப்புக்கள், இலஞ்சம் அடிப்புக்கள் போன்ற அனைத்தையும் அம்பலப்படுத்து! முதலாளிகள் செல்வத்தை கொள்ளையடித்து மலையெனக் குவிப்பது இத்தகைய பகற்கொள்ளைகள் மூலமே. முதலாளித்துவ அராஜகம் இலாப வெறி மூலம் நிஜ உற்பத்தி யாளர்களான தொழிலாளர்கள், விவசாயிகள் உற்பத்தி செய்யும் செல்வம் எங்ஙனம் நாசமாக்கப் படுகின்றது என்பதை முழு சமுதாயமும் அறியும் விதத்தில் அம்பலமாக்கு!

## அரசியலமைப்புச் சபையை கூட்டு

1948ல் இலங்கையில் அமைக்கப்பட்ட ஒற்றையாட்சி, பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் இலங்கை முதலாளிகளுடன் சேர்ந்து சதி செய்து திணித்த ஒரு வம்பு அரசாகும். அது என்றுமே பொதுஜனங்களின் உரிமைகளை வழுங்கிய ஒன்றல்ல. 1948 பெப்ரவரி 4ல் இலங்கையின் மார்க்சிசக் கட்சி - இந்திய போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சியின் இலங்கை அலகான போல்ஷிவிக் சமசமாஜக் கட்சி - இந்த அரசியலமைப்புக்கும் அரசுக்கும் எதிராகத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை வழிநடத்தியது. தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை இரத்துச் செய்ததும் சிங்கள-தமிழ் இனவாத மோதுதல்களை உண்டுபண்ணியதும் இந்த ஜனநாயக விரோத ஆட்சியே. 1972ல் சமசமாஜ-ஸ்டாலினிசத் தலைவர்களின் உதவியோடு இலங்கையின் அரசினை சிங்கள-பௌத்த அரசாகப் பேர் சூட்டி, இந்த இனவாத பிளவு மேலும் உச்சமடையச் செய்யப்பட்டது. 1978ல் யூ.என்.பி. அரசாங்கம் அரசியலமைப்பினை மேலும் பிற்போக்கானதாக மாற்றியதோடு பேரளவிலான பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியை ஒழித்து அதை வெறும் இறப்பர் சீல் ஆக மாற்றியது. இதன் மூலம் சர்வாதிகார நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி உருவாக்கப்பட்டது. ஆறாவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் தமிழ் தேசிய இனம் ஜனநாயக உரிமைகளைக் கோருவது சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டது. முதலாளித்துவ அரசியல் அமைப்பும், அதன் பிரகாரம் திணிக்கப்பட்ட அரசும் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களுக்கு முழு எதிரியாக விளங்கியது. அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பன இந்த அரசியலமைப்பின் சர்வாதிகாரக் கோலத்தைக் காட்டுகின்றன.

● தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியலமைப்புச் சபையை கூட்டு! ● இன்றுள்ள அரசியலமைப்பையும் அதன் கீழான ஒடுக்குமுறைச் சட்டங்களையும் நீக்கு!

## தோட்டங்கள், பக்டரிகள், வங்கிகள், நிதிக் கம்பனிகளை தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கு

தொழிலாளர் விசாரணை கமிட்டிகள் மூலம் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி கணக்கு ஏடுகளை பரிசோதனை செய்வதும், ஆய்வு செய்வதும் பொருளாதாரத்தின் நிஜ நிலைமையை புரிந்து கொள்ள தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் வாய்ப்பளிக்கின்றது.

தனியார் சொத்து உரிமையினால் அழிவும், ஊழலும், ஒட்டுண்ணித்தனமும், சமூகப் பேரழிவும் சிருஷ்டிக்கப்படுகின்றது. உக்கிரம் கண்டுவரும் பொருளாதார வீழ்ச்சியினுள் பொதுமக்களின் மேல் இந்த அழிவுகள் மேலும் உக்கிரமமான முறையில் திணிக்கப்படுகிறது. தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் அத்தியாவசியமான தேவைகளுக்காக அல்லாது இலாபத்துக்கான உற்பத்திக்காக பொருளாதாரத்தின் வளங்கள் தனிப்பட்ட சொத்துமுறையின் கீழ் ஈடுபடுத்தப்படுகின்றது. திறந்த பொருளாதாரம், சந்தைச் சக்திகளின் தொழிற்பாடு போன்ற கோட்பாடுகள், கொடூரமான முறையில் இலாபத்தை பிழிந்து எடுக்க ஏகாதிபத்திய ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு உள்ள தேவைகளின் அடிப்படையில் முன்வைக்கப்படும் கோட்பாடுகளாகும்.

முதலாளித்துவ முறை முழுமனே அரசாங்கத்தினுள் தலைமூழ்கிப் போயுள்ளது. கோடிக்கணக்கான பணம் பங்குமுதல் சந்தைக்கும், கடன்களுக்கும், பங்குமுதல் சந்தை ஊழல்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் அமைக்க பணம் இல்லை என முதலாளித்துவ ஆட்சியாளர்கள் கைவிரிக்கிறார்கள்.

இவை எல்லாம் மறுபுறத்தில் தொழில் நுட்பத்தின் புரட்சிகர அபிவிருத்திகள் மூலம் உலகளாவிய ரீதியில் உற்பத்தியையும் பங்கீட்டையும் திட்டமிட்டு மனித இனத்தின் நலனுக்காக பயன்படுத்தக் கூடிய ஒரு நிலையிலேயே நடைபெறுகின்றது. ஏகாதிபத்திய பிற்போக்காளர்கள் மட்டுமன்றி ஏகாதிபத்திய எடுபிடி "புத்திஜீவிகள்", சமசமாஜ, நவசமசமாஜ கட்சிகள் போன்ற முதலாளித்துவ முகாம்களுக்குச் சென்ற சீர்திருத்தவாதக் கட்சிகள், "ஜனதா மிதுரோ" போன்ற பிற்போக்கு அமைப்புக்கள் பழைய சோவியத் யூனியனினதும் கிழக்கு ஐரோப்பாவினதும் வீழ்ச்சிக்கு மத்தியமயமாக்கப்பட்ட திட்டமிடலே காரணமாகியது எனவும் அது சோசலிசத்தின் தோல்வியின் இலட்சணம் எனவும் ஊழையிடுகின்றார்கள். ஸ்டாலினிசத்தின் கீழ் சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் இருந்தது சோசலிசம் அன்றி அதிகாரத்துவ வன்முறையும் அராஜகமும் ஆகும். அது முதலாளித்துவ ஒடுக்குமுறையின் வெளிப்பாடாகும். மத்தியமயமாக்கப்பட்ட திட்டமிடலுக்கு எதிராகத் தர்க்கம் புனைவோர் முதலாளித்துவ சுரண்டலாளர்களின் இன்றைய பகற்கொள்ளையை நியாயப் படுத்தக் கோட்பாடு புனையும் குண்டர்கள் ஆவர். மனித இனம் திட்டமிட்ட முறையில் பொருளாதார அபிவிருத்தியை உண்டுபண்ணி, முன்னேறிச் செல்ல உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்திகள் அவகாசம் வழங்கியுள்ளன. உற்பத்திச் சக்திகளின் தனியுடமை சமூகத்தை சீரழிக்கும் மார்க்கமாகும்.

உலகளாவிய ரீதியில் இலாபத்தைத் தேடி நாட்டுக்கு நாடு முதலீட்டை மாற்றும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள், உற்பத்திச் சக்திகளுக்குப் பிரமாண்டமான அழிவை உண்டுபண்ணும் தனிச் சொத்து உரிமையின் முக்கிய வடிவமாக உலகப் பொருளாதாரத்தை எடுத்துள்ளது.

உற்பத்திச் சக்திகள் அதன் விலங்குகளாக விளங்கும் இந்த தனியுரிமையில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும்; அந்தத் தனியார் உரிமையை பாதுகாக்கின்றதும் உலகப் பொருளாதாரத்தினை கூறுபோடுகின்றதுமான தேசிய அரசுகளின் விலங்குகளில் இருந்து விடுதலை செய்ய வேண்டும். இந்தப் பணியினை அவற்றுடன் தொடர்புபட்ட முறையில் அபிவிருத்தி கண்ட புரட்சிகர சமூக சக்தியான தொழிலாளர் வர்க்கத்தினாலேயே சாதிக்கமுடியும். உற்பத்திச் சாதனங்களின் தனியுரிமை மூலம் சிறிய உற்பத்தியாளர்கள் - ஏழை விவசாயிகள், மீனவர், சிறு பயிர் உற்பத்தியாளர்கள் போன்றோர்-ஒடுக்குமுறைக்கு உள்ளாவதை அந்த சமூகச் சக்தியினாலேயே ஒழித்துக்கட்ட முடியும்.

விஞ்ஞானபூர்வமான திட்டமிட்ட பொருளாதாரத்தினை தயார் செய்வதில் முதலும் முக்கியமுமான பணி வங்கி தேசியமயமாகும். ஒரு புறத்தில் அரச வங்கிகளை நாசமாக்கி அத்துறையினுள் பாய்ந்து கொள்ள வெளிநாட்டு பெரும் வங்கிகள் செயற்படுகின்றன. மறுபுறத்தில் கூட்டுத்தாபனங்களதும் தேசிய முதலாளிகளதும் கோடானு கோடி பண மோசடிகள் இடம் பெறுவது வங்கிகளின் ஊடாகவே. விவசாயிகளுக்காக அரச வங்கிகளால் வழங்கப்பட்டுள்ள கடன் அளவு நூற்றுக்கு 6 வீதமாகும். எனினும் பெரும் வர்த்தகர்கள் கோடிக் கணக்கில் கடன் பெற்று விட்டு, திருப்பிச் செலுத்தாது விட்டுவிடுகிறார்கள். அவர்களின் நிதி இரகசியங்கள் இங்குதான் பொதிந்துள்ளன.

இந்த வங்கிகளை தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தொழிலாளர் அரசினுள் தேசியமயமாக்கின் சகல ஒட்டுண்ணி சுரண்டல்களுக்கும் முடிவு கட்டவும் திட்டமிட்ட பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கும் வளங்களை பயன்படுத்தவும் சந்தர்ப்பம் கிட்டும்.

● வங்கிகள் நிதி நிறுவனங்களையும் வெளிநாட்டு கம்பனிகளையும் பெரும் தோட்டங்கள் பக்டரிகள் வர்த்தக நிறுவனங்களையும் தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கு! இந்நிறுவனங்களை உழைக்கும் மக்களின் அவசியங்களுக்கு பயன்படுத்துவதை திட்டமிடவும் பக்டரி கமிட்டிகளுக்கு ஆலோசனை பெறவும் கணக்காளர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் நிபுணர்களின் உதவியை பெற்றுக் கொள்ள முடியும். ● வங்கிகளுக்கு கடன் செலுத்தவுள்ள பெரும் வர்த்தகர்களின் சொத்துக்களை அரசு கையேற்க வேண்டும்! ● வங்கிகள் சிறிய வர்த்தகர்களுக்கும் விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டு திருப்பிச் செலுத்தப்படாதுள்ள சகலதையும் அழித்து எழுது! ● விவசாய பொருட்களின் போக்குவரத்துக்கு தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கப்பட்ட போக்கு வரத்து சேவையை நிறுவு! வெளிநாட்டு ஏகபோகங்களினாலும் நிதி கம்பனிகளாலும் வெளிநாட்டு வர்த்தகத்தில் செய்யப்பட்ட மோசடிகளை நீக்குவதற்கு ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தை - வெளிநாட்டு வர்த்தகத்தை அரசின் தனியுரிமை ஆக்கு! ஏகாதிபத்திய வங்கிகளுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும் கொடுக்க வேண்டிய கடன்களை இரத்துச் செய்! சட்டரீதியாக்கப்பட்ட மோசடி பங்குமுதல் சந்தையை தடை செய்!

இந்தப் புரட்சிகர நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இலாபத்துக்காக செய்யப்படும் உற்பத்தி முறையை ஒழிக்கவும் அதற்குப் பதிலாக சோசலிச அடிப்படையில் பொருளாதாரத்தை மீளமைக்கவும் வழிபிறக்கும்.

## ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்ப்போம்

ஏகாதிபத்திய யுத்தத்தினதும் காலனித்துவத்தினதும் அச்சுறுத்தல் மீண்டும் உலகத் தொழிலாளர் வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களதும் முன்நிலையில் உருவாகியுள்ளது. உலகச் சந்தையைப் பங்கிட்டுக் கொள்ளும் பொருட்டு ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்களிடையே இப்போது வளர்ச்சி கண்டு வரும் மோதுதல்கள் புறநிலை ரீதியில் மூன்றாம் உலக யுத்தத்தினை நோக்கிப் பயணம் செய்கின்றன. அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் இழந்துவிட்ட பொருளாதார ஆதிக்கத்தை பெறும் பொருட்டு தமது இராணுவ பேயாட்டத்தில் இறங்கியுள்ளனர். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் போடப்பட்ட தடைகளை உடைத்துக் கொண்டு ஜேர்மனதும், ஜப்பானதும் ஆளும் வர்க்கங்கள் இராணுவ பலத்தைக் கட்டி எழுப்பத் தொடங்கியுள்ளன

காலனித்துவத்துக்கான ஏகாதிபத்தியவாதிகளின் பயணம், இலாபகரமான உழைப்பையும் மூலப்பொருட்களையும் கொள்ளையடிக்கும் அவசியத்துடன் பிணைந்துள்ளது. ஈராக்குக்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய வல்லரசுகளின் தலையீடானது காலனிகளைக் கைப்பற்றும் முகமாக இராணுவத் தலையீடுகள் அபிவிருத்தி காணும் வேகத்தைக் காட்டியது. மனித உரிமைகளைப் பேணும் பேரில் சோமாலியாவினுள் பாய்ந்து விழுந்த ஏகாதிபத்தியவாதிகள் பொஸ்னியாவிலும் அத்தகைய தலையீட்டில் ஈடுபட்டுள்ளனர். வட கொரியாவுக்கு எதிரான ஏகாதிபத்திய யுத்த ஆத்திரமூட்டல்களும் ருவாண்டாவினுள் பிரான்ஸ் ஊடுருவியமையும் இந்தத் தொழிற்பாட்டின் ஒரு பாகமேயாகும்.

பழைய சோவியத் யூனியனைத் துண்டாட அதன் கொம்பிரதோர்களை தூண்டி வரும் ஏகாதிபத்தியவாதிகள் அவற்றினைத் தமது எதிர்காலக் காலனிகளாகக் காண்கிறார்கள். சகல பழைய காலனித்துவ நாடுகளின் முன்நிலையிலும் ஏகாதிபத்திய காலனித்துவத்தின் அச்சுறுத்தல் தோன்றியுள்ளது. இராணுவரீதியான தலையீட்டுக்காக இந்த ஆளும் வர்க்கங்கள் காரணிகளைத் தேடியும், சிருஷ்டித்தும் வருகின்றன.

ஈராக்குக்கு எதிரான யுத்தத்தின் போதும் அதன் பின்னர் இடம்பெற்ற ஏகாதிபத்திய இராணுவ தலையீட்டின் போதும் இந்தியத் துணைக் கண்ட ஆளும் வர்க்கங்கள், அவற்றுடன் சேர்ந்து காலனித்துவத்தின் தேசிய கொந்தராத்துக்காரராகும் தயார் நிலையைக் காட்டிக் கொண்டனர்.

இலங்கையின் முதலாளி வர்க்கம் இந்த ஆக்கிரமிப்புத் தலையீடுகளுக்கு முழுமனே ஆதரவு கொடுத்தது. சிங்கள, தமிழ் முதலாளி வர்க்கம் இனவாத யுத்தத்தைச் சாட்டாகக் கொண்டு ஏகாதிபத்திய இராணுவத் தலையீட்டினை நடாத்தும் ஆபத்து வளர்ச்சி கண்டு வருகின்றது. 1987 இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு ஏகாதிபத்தியவாதிகளின் அங்கீகாரத்துடனேயே இடம்பெற்றது. இரணவிலவில் இன்று நிறுவப்பட்டு வரும் "வோயிஸ் ஒப் அமெரிக்கா" நிலையம் ஏகாதிபத்திய யுத்தத் திட்டத்தின் ஒரு பாகமாகும் என்பது பகிரங்க இரகசியம்.

இலங்கைத் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்தியம் நடாத்தும் யுத்தத் தயாரிப்புக்களையும் ஆக்கிரமிப்புத் தயாரிப்புக்களையும் ஒரேயடியாக எதிர்க்க வேண்டும். உலக யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்தை உறுதி செய்ய வேண்டும். ஏகாதிபத்தியத்தை பூகோளத்தில் இருந்து துடைத்துக் கட்டுவது, உலக சோசலிசப் புரட்சி வேலைத் திட்டத்துக்காக அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கம் தொடுக்கும் போராட்டம் மூலம் மட்டுமே சாத்தியமாகும்.

## இந்திய துணைக்கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தை நோக்கி

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இந்தியத் துணைக் கண்டத்தை ஆட்சி செய்த காலத்தில் முதலாளித்துவம் ஸ்தாபிதம் செய்யப்பட்ட போதிலும் அரசியல் நிர்வாகம் "பிரித்தாளும்" புகழ்பெற்ற உபாயத்தின் மூலமே நடாத்தப்பட்டது. நிலமானித்துவ பிரஜைகள் அடக்குமுறை சமூக உறவுகளும், இனவாத வேறுபாடுகளும் இதன் பொருட்டு கேவலமான முறையில் பயன்படுத்தப்பட்டன. 1947-48ல் இப்பிராந்தியத்தின் ஆட்சியை தேசிய முதலாளிகளின் கைக்கு மாற்றிய போது அந்த வேறுபாடுகள் புதிய மட்டத்திற்குக் கொணரப்பட்டன. இந்தியாவின் உடம்பைத் துண்டித்து பாகிஸ்தான், இந்திய அரசுகள் இரண்டு திணிக்கப்பட்டன. இலங்கையில் "ஒற்றையாட்சி" அரசு திணிக்கப்பட்டது.

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஆளும் வர்க்கங்கள் ஏகாதிபத்திய வர்க்க ஆட்சியை நடாத்தும் பொருட்டு இந்த அரசுகளின் உள்ளேயும் அரசுகள் இடையேயும் இனவாத, மதவாத மோதுதல்களையும் யுத்தங்களையும் மீண்டும் மீண்டும் தூண்டிவிட்டன. தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை மதவாத-இனவாத கோட்டின் ஊடாக பிளவுபடுத்தி இரத்தம் சிந்த வைப்பது தமது நெருக்கடி மிக்க ஆட்சியை நடாத்துவதற்கான உபாயம் ஆகச் செய்யப்பட்டது. இந்தியா, பாகிஸ்தானிலும் பின்னர் உருவாக்கப்பட்ட பங்களாதேஷ், இலங்கை, பர்மா, நேபாளம் ஆளும் வர்க்கங்களினதும் காட்டுமிராண்டி ஆட்சியின் நிலைமை இதுவே.

இன்று ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் இந்த பொருளாதாரங்களைத் திறந்து கொண்டு, ஊடுருவிக் கொள்ளும் நிலைமையில் ஒரு காலத்தில் ஏதேனும் இணைப்பு இருந்த இந்நாடுகள் சிறிய குட்டித் துண்டுகளாக மாறும் போக்கு வளர்ச்சி கண்டுள்ளது. அந்தந்த தேசியக் குழுக்களின் முதலாளிகள் நேரடியாக ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத் தாபனங்களை வரவழைக்கவும் அதன் மூலம் தமது ஆளும் கும்பல்களைப் பலப்படுத்தவும் முயற்சிக்கின்றன. இந்தியாவின் சகல மாநில அரசுகளும் மாநிலங்களின் உள்ளும் முதலாளி வர்க்கங்கள் வெளிநாட்டு முதலீட்டுடன் பிணைந்து கொள்ளும் வேலைத்திட்டத்துக்கு மாறிச் செல்ல முயற்சிக்கின்றன. அவ்வாறே மத, இன மோதுதல்களை தூண்டுவது, தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை

பிளவுபடுத்தி பலவீனம் அடையச் செய்து கூட்டுத்தாபனங்களுக்கு விற்கவும் காட்டுமிராண்டி நிலைமைகளுக்குள் தள்ளுவதற்குமான ஆயுதமாகியுள்ளது. ஏகாதிபத்தியவாதிகள் மனித உரிமைகளை காக்கும் பேரில் இராணுவத் தலையீட்டுக்கு தயார் செய்யவும் பிரிவினைவாத இயக்கங்களுக்கு கையசைக்கவும் இந்த மோதுதல்களைப் பயன்படுத்தும்.

மறுபுறத்தில் பிராந்தியத்தின் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகள் நேரடி முதலீட்டை அழைக்கும் பொருட்டு ஆளுக்காள் போரிட்டுக் கொண்ட போதிலும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான எதிர்ப்புரட்சித் தலையீட்டுக்கு இணைந்து கொள்கிறார்கள். தென் ஆசிய ஒத்துழைப்பு அமைப்பு அத்தகைய சதிக்கென அமைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். 1987ல் இந்திய ஆளும் வர்க்கம் இலங்கையில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பைத் தொடுத்தது மறுபுறத்தில் தென்மாகாணங்களில் யூ.என்.பி. அரசாங்கத்தின் பயங்கரங்களுக்கு இடமளித்த படியேயாகும். இப்போது இந்தியாவின் நரசிம்ராவ் அரசாங்கமும் தமிழ்நாட்டின் ஜெயலலிதா ஆட்சியும் இலங்கை ஒடுக்கப்படும் தமிழர்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டிய வண்ணம் தமிழ்நாட்டு மக்களுக்கு எதிராக மிலேச்ச அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே யுத்தத்துக்கான ஆதாளபாதாளத்தை நிர்மாணிக்க இரு நாட்டினதும் ஆட்சியாளர்கள் செயற்படுகிறார்கள்.

முழு அரசியல் அபிவிருத்தியும் உலக சோசலிசப் புரட்சியின் முன்நோக்கின் அடிப்படையில் ஆசிய சோசலிச ஐக்கிய குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்துக்காகப் பிராந்திய தொழிலாளர் வர்க்கம் ஒன்றிணைந்து போராட வேண்டியதன் பிரமாண்டமான அவசியத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. நான்காம் அகிலம் இந்த வேலைத்திட்ட அடிப்படையிலேயே பிராந்தியத்தினுள் போராட்டத்தை ஆரம்பித்தது. 1942ல் அமைக்கப்பட்ட இந்திய போல்ஷிவிக் - லெனினிஸ்ட் கட்சியை பிராந்தியத்தின் தொழிலாளர் வர்க்க, ஒடுக்கப்படும் மக்களின் தலைமையாக நிறுவி, ஏகாதிபத்திய ஆட்சியையும் ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவத்தையும் தூக்கி வீசி, சோசலிச வேலைத் திட்டத்தினையும் ஜனநாயகப் பிரச்சினைகளையும் தீர்க்கும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்துக்காகப் போராடியது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அனைத்துலகக் குழுவின் ஆதரவு இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகமும் அந்தப் புரட்சிகரப் பாரம்பரியங்களின் அடிப்படையில் காலூன்றி இந்தியத் துணைக்கண்ட சோசலிச வேலைத்திட்டத்தை முன்வைக்கின்றது.

## இந்த வேலைத்திட்டத்துக்கான போராட்டத்தை ஒழுங்கு செய்வது எப்படி?

தொழிலாளர் வர்க்கத்தின் முன்னால் உள்ள முக்கியமான தடை, சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ, இ.தொ.கா. அமைப்புக்களும் தொழிற் சங்கங்களும் வர்க்கத்தினுள் சிருஷ்டித்துள்ள ஸ்தம்பித நிலையும். குழப்பமும்

நாசகார வேலைகளும் இந்த அமைப்புக்களின் எஞ்சியுள்ள செல்வாக்குமே. இக்கட்சிகளும் தொழிற்சங்கங்களும் அனைத்துலக மூலதனத்தின் ஏஜன்சியாகவும் முதலாளித்துவ வேலைத்திட்டத்தின் சகாக்களாகவும் மாறியுள்ளன. அந்தந்த இடங்களுக்குரிய தொழிலாளர் பிரச்சினைகளில் கூட இவர்கள் முதலாளி வர்க்கத்தின் அத்துவக்காத்துகளாக தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக நின்று கொண்டுள்ளனர்.

தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவத்தில் இருந்து சுயாதீனமான அரசியல் சக்தியாக அணிதிரள வேண்டும். இக்கட்சிகளும் அமைப்புக்களும் கூறுவது போல் முதலாளித்துவ யூ.என்.பி., சி.ல.சு.க. பின்னால் அல்லது வேறு குட்டி முதலாளித்துவ சக்திகளின் பின்னால் செல்வதை தொழிலாளர் ஒரேயடியாக நிராகரிக்க வேண்டும். வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளின் அரசியலில் இருந்து பிரிந்து, தொழிலாளர் அணிதிரள்வது பெரும் அவசியமாகும். இத்தலைவர்களை தொழிலாளர் மத்தியில் இருந்து ஓட்டிக் கலைக்க போராட்டம் நடாத்துவது அவசியம்.

● சகல வேலைத்தலங்களிலும் தொழிலாளர் வதிவிடங்களிலும் தொழிலாளர் நடவடிக்கைக் குழுக்களை அமைக்கும்படி நாம் பிரேரிக்கின்றோம். கிராமப்புறங்களில் தொழிலாளர், விவசாயிகள், மற்றும் ஒடுக்கப்படுவோர், இளைஞர்களின் பங்களிப்போடு நடவடிக்கை குழுக்களைக் கட்டி எழுப்ப வேண்டும். இது வேலைத்தலங்களில் தொழிலாளர்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை உறுதிப் படுத்தவும் அனைத்துலக ரீதியில் ஒருங்கிணைப்பை உறுதி செய்யவும் எடுக்கும் மிகவும் முற்போக்கான நடவடிக்கையாகும். ● தொழிலாளர்களின் ஆயுதம் தாங்கிய படை அணிகளை கட்டியெழுப்ப நாம் பிரேரிக்கின்றோம்.

முதலாளி வர்க்கம் அரச படை அணிகள், கொலைகார, குண்டர் கும்பல்கள், பாசிச சக்திகளை அணைத்துக் கொண்டு நடாத்திய மக்கட் படுகொலை இயக்கத்தை சகல தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் அறிவர். இந்த முதலாளிகள் இந்த நிலைமையைத் தாண்டிச் செல்லும் இரத்தக் களரிகளுக்குத் தயாராகி வருகிறார்கள். முதலாளித்துவ அரசாங்கத்தை ஆட்சியில் இருத்தி ஜனநாயகத்தை உருவாக்குவது பற்றியும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை ஆயுதபாணியாக்குவது சட்ட விரோதமானது எனவும் கூறும் துரோகத் தலைவர்களின் பேச்சுக்கள் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை நிராயுதபாணியாக்கிப் பலியிடும் கடைகெட்ட முயற்சியின் ஒரு பாகமாகும். தமது உயிர்ப்பாதுகாப்புக்காக ஆயுதம் தாங்கிய தொழிலாளர் படையணிகளை அமைப்பது தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைப் பொறுத்தமட்டில் பெரும் அவசியமாகும்.

● தொழிலாளர் நடவடிக்கைக் குழு, பாதுகாப்பு கமிட்டிகள் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் சோவியத்துக்களை நிறுவுவதை இலக்காகக் கொள்ள வேண்டும். முதலாளித்துவ அரசை தூக்கி வீசி, தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கத்தை அமைப்பதை நோக்கி செல்வதானது சோவியத் சபைகளுள் அதிகாரத்தை ஒருங்கிணைப்பதன் மூலமே சாத்தியமாகும். முதலாளித்துவ அரசின் பொலிஸ், இராணுவம் சிறைச்சாலை, நீதிமன்றம் களை கலைத்து தொழிலாளர் அரசை நிறுவவும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின்

ஜனநாயக ஆட்சியை அமைக்கவும் சோவியத் சபைகள் முன் செல்லும்.

# நான்காம் அகிலத்தைக் கட்டியெழுப்பு!
# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை கட்டியெழுப்பு!

உலகளாவிய ரீதியில் சகல தேசியவாத கட்சிகளும், தொழிற்சங்கங்களும் வங்குரோத்தடைந்து, பிற்போக்கின் முகாமுக்குள் பயணம் செய்தமை நான்காம் அகிலத்தின் வரலாற்று அர்த்தத்தினை வெளியரங்குக்கு கொணர்ந்துள்ளது. ஏகாதிபத்திய சகாத்தத்தில் உலகப் பொருளாதாரத்தின் நிலைமைகளின் கீழ் தேசியவாதத்தின் வங்குரோத்தையும் பிற்போக்கையும் சுட்டிக் காட்டி மார்க்ஸ்–லெனினிச அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தினைப் பேணவும், முன்னெடுக்கவும் போராடியது நான்காம் அகிலமே. "தனிநாட்டில் சோசலிசம்" என்ற பிற்போக்கு கோட்பாட்டின் கீழ், சோவியத் யூனியனின் ஸ்டாலினிச அதிகாரத்துவம் தேடிக்கொடுத்த பேரழிவு மிக்க தலைவிதி, ஸ்டாலினிசத்துக்கும் அதன் பந்தம்கார பப்லோவாதத்துக்கும் மற்றும் போக்குக்களுக்கும் எதிரான நான்காம் அகிலத்தின் போராட்டத்தை ருசுப்படுத்தி உள்ளது.

கடந்த ஒன்றரைத் தசாப்தங்களாக உலகப் பொருளாதாரம் பூகோளமயமாகியுள்ளது. அதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டம் அனைத்துலக ரீதியில் இணைக்கப்படுவதன் பிரமாண்டமான வரலாற்று அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது. அதனை சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் மட்டுமே சாதிக்க முடியும். நான்காம் அகிலத்தை ஸ்டாலினிசத்தினுள் கரைத்துவிட முன்வந்த பப்லோவாத சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக 1953ல் அனைத்துலகக் குழு அமைக்கப்பட்டது. மீண்டும் 1963லும் 1980 பதுகளிலும் தோன்றிய சந்தர்ப்பவாதச் சக்திகள் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவை ஸ்டாலினிச தேசியவாத தலைமைக்கும் அதன் ஊடாக ஏகாதிபத்தியத்துக்கும் அடிமைப்படுத்த முயன்றனர். அனைத்துலக குழு, இந்தச் சந்தர்ப்பவாதங்களைத் தோற்கடித்து, நான்காம் அகிலத்தைக் காப்பாற்றியது.

1968ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இலங்கையில் அமைக்கப்பட்டது, உலகளாவிய ரீதியிலும் இலங்கையிலும் பப்லோவாதம் முன்னெடுத்த காட்டிக்கொடுப்புக்கு எதிராக அனைத்துலகக் குழு தொடுத்த போராட்டத்தின் மூலமேயாகும். 1964ல் சமசமாஜக் கட்சியின் மாபெரும் காட்டிக் கொடுப்பு பப்லோவாதத்தின் பெறுபேறாகும். இலங்கைத் தொழிலாளர் வர்க்க தலைமையின் நெருக்கடி இந்த காட்டிக் கொடுப்பினால் உக்கிரமமான முறையில் தலைநீட்டியது. அதை வெற்றி கொள்ளும் பொருட்டு அனைத்துலகக் குழு தொடுத்த போராட்டம் 1968ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு அத்திவாரமிட்டது.

1968 தொடக்கம் கடந்த 26 ஆண்டுகளாக இடம்பெற்ற மார்க்சிசக் கொள்கைப்பிடிப்பான போராட்டத்தின் வரலாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு உண்டு. அது சகல சந்தர்ப்பவாதிகளுக்கும் எதிராக அனைத்துலகவாதக் கொள்கையின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட புரட்சிகரப் போராட்டமாகும்.

1970-77 காலப்பகுதியில் சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளின் துரோகத் தலைவர்கள் முதலாளித்துவ சி.ல.சு.க.வுக்குள் நுழைந்து கொண்டு நடாத்திய வர்க்க சகவாழ்வுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்துக்காகவும், 1971 ஏப்ரல் கிளர்ச்சியை நசுக்குவதற்கு எதிராகவும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும், தோட்ட தேசியமயம் எனப்படுவதுடன் உக்கிரம் கண்ட தோட்டத் தொழிலாளர்களின் அடக்குமுறைக்கு எதிராகவும், வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளைக் காக்கவும், மாணவ இயக்கத்திற்கு எதிரான அடக்குமுறையை எதிர்த்தும், கிராமப்புற விவசாயிகளின் மேல் திணிக்கப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிராகவும், அவசரகாலச் சட்ட சட்ட ஆட்சியை எதிர்த்தும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஈவிரக்கமின்றி போராடியது. கூட்டரசாங்கம் பு.க.க. பத்திரிகைகளை தடைசெய்து தலைமைக்கு எதிராக அரச அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட்டது. பு.க.க. அங்கத்தவர்களை தொழில்கள், தொழிற் சங்கங்களில் இருந்து விலக்குவதற்கு சமசமாஜ-ஸ்டாலினிச தலைவர்கள் முன்னணியில் நின்றனர். இவை அனைத்துக்கும் எதிரிலும் உறுதியுடனும் கொள்கைப்பிடிப்புடனும் பு.க.க. போராடியது.

1977ல் யூ.என்.பி., சமசமாஜ-ஸ்டாலினிச தலைவர்களின் காட்டிக் கொடுப்பின் மீதாகவே ஆட்சிக்கு வந்தது. யூ.என்.பி. கட்டவிழ்த்துவிட்ட தாக்குதல்களின் எதிரில் அடிபணிந்த சமசமாஜ-ஸ்டாலினிச தலைவர்களும், தொழிற் சங்கங்களும் பின்னர் அத்தாக்குதல்களின் பங்காளிகள் ஆகினர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் சகல பிரிவினருக்கும் எதிராகத் தொடுக்கப்பட்ட தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டப் போராடியது. தமிழர் விரோத இனவாத யுத்தத்துக்கும் 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கும், இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கும் எதிராக தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத விதிமுறையின் அடிப்படையில் போராடிய ஒரே கட்சி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. 1988-90 யூ.என்.பி. அரசாங்கமும் பாசிச அமைப்பாக மாறிய ஜே.வீ.பி.யும் தொடுத்த பயங்கரவாத தாக்குதல்களில் இருந்து தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை காக்க தொழிலாளர் அமைப்புக்களின் ஐக்கிய முன்னணிக்காக பு.க.க.வும் அனைத்துலகக் குழுவும் உலகளாவிய ரீதியில் பிரச்சாரம் செய்தது.

கிராமப்புற இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதை எதிர்த்தும் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யவும் போராடிய ஒரே இயக்கம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. தனியார்மயம், இலவசக் கல்வி, சுகாதார சேவை அழிப்பு, சுதந்திர வர்த்தக வலயங்களில் இடம் பெறும் குரூரமான சுரண்டல் என்பவற்றுக்கு எதிராக சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் பு.க.க. போராடியது. யூ.என்.பி. அரசாங்கம் பு.க.க. போராட்டத்தை நசுக்கும் பொருட்டு இடைவிடாது அரச அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. 1979ல் பு.க.க. இராஜாங்கனை அமைப்பாளர் ஆர்.பி. பியதாச யூ.என்.பி. குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டார். 1988-90 அரச, பாசிச பயங்கரத்தின் போது யூ.என்.பி. பொலிஸ்-இராணுவ படைகள் பு.க.க. அலுவலகத்துக்கு ஆக்கிரமிப்புச் செய்ததோடு, அச்சகத்தின் உள்ளும்

பாய்ந்தன. ஜேவீ.பி. பாசிச குண்டர் படைகள் பு.க.க. உறுப்பினர்களான வெலிமட ஆர்.ஏ. பிட்டவெல, பேராதெனிய பீ.எச். குணபால, சிலாபம் கிரேஷன் கீகியனகேயை கொலை செய்தன. பு.க.க. இன்றைய தலைமையை கைதுசெய்ய யூ.என்.பி. அரசாங்கம் முயற்சித்தது.

இன்றைய மார்க்சிசமான ட்ரொட்ஸ்கிசத்தின் அடிப்படையில் அனைத்துலக சோசலிசத்தின் புரட்சிகர வேலைத்திட்டத்தை இலங்கையுள் முன்வைப்பது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. இம்முறை தேர்தலில் பு.க.க. முன்வைப்பது அந்த வேலைத்திட்டத்தினை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களிடையே எடுத்துச் செல்வதும் அதன் அடிப்படையில் அவர்களை அணிதிரட்ட வல்ல புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்புவதே. எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதி தேர்தலிலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் எந்தவொரு பிரச்சினையும் தீக்கப்பட்டு விடாது. அதன் பின்னணியில் முதலாளி வர்க்கமும், அதன் கட்சிகளும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான பெரும் ஆபத்தினை அபிவிருத்தி செய்கின்றன. அவர்களுக்கு உள்ள ஒரே தீர்வு, பு.க.க. முன்வைக்கும் நான்காம் அகிலத்தின் பதாகையைச் சூழ அணிதிரள்வதே.

சோசலிச புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர்: ..........................................................

முகவரி: ..........................................................

..........................................................

..........................................................

தொலைபேசி இலக்கம்: ..........................................

இப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10.

## 'தொழிலாளர் பாதை' சந்தாதாரர் ஆகுங்கள்

அஞ்சல் சட்டணம் உட்பட சந்தா விபரம்

1 மாதம் - ரூபா 8/-    3 மாதம் - ரூபா 24/-
6 மாதம் - ரூபா 48/-    1 வருடம் - ரூபா 96/-

பெயர்: ..........................................................

முகவரி: ..........................................................

..........................................................

தொலைபேசி இலக்கம்: ..........................................

சந்தாக் காலம்: .................. ரூபா .......... சதம் ..............

அஞ்சல் அல்லது காசுக் கட்டளை அனுப்ப வேண்டிய முகவரி:

'தொழிலாளர் பாதை'
இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10.

# பொதுத் தேர்தல் - 1994

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தேர்தல் பிரச்சாரத்துக்கு ஆதரவளியுங்கள்

- புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மேற்கொண்டு வரும் *1994* பொதுத் தேர்தல் பிரச்சாரம் தொடர்பான மேலதிக விபரங்களை அறிய நான் விரும்புகின்றேன்.
- புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தேர்தல் வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கும் முகமாக எனது பிரதேச தேர்தல் கமிட்டியில் சேர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.
- புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் .......... பிரதிகள் அனுப்பவும் (ஒன்று ரூபா. 4/- தபால் கட்டணத்துடன்)

பெயர் ..................................................

விலாசம் ..................................................

..................................................

தொழில் ..................................................

பாடசாலை/பல்கலைக் கழகம் ..............................

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

*90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,*

*கொழும்பு 10.*

ISBN-955-9123-29-07

3.00

தொழிலாளர் பாதை

නො. 90, 1 වන මාලිගාකන්ද පටුමග පදිංචි [illegible] විසින් මහරගම ... පාරේ නො. 51සී පිහිටි මුද්‍රණාලයේ මුද්‍රණය කරවන ලදී.